# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 வைகாசி 12 சனிக்கிழமை (26.05.2007)UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 180


## சாவகச்சேரி இராணுவக் காவலரண் மீது நேற்றுமாலை துப்பாக்கி வேட்டுக்கள்

யாழ்ப்பாணம், மே 26

சாவகச்சேரி பிரதேச செயலகம் முன்பாக அமைந்துள்ள படையினரின் காவலரண் மீது நேற்று மாலை 5.40 மணியளவில் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. படையினரும் பதிலுக்கு வேட்டுக்களைத் தீர்த்தனர்.

சேதவிவரங்கள் தெரியவரவில்லை.

இதேவேளை -

வியாழக்கிழமை மாலை 4 மணியளவில் மீசாலைச் சந்தியில் உள்ள காவலரண் மீதும் வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதாக அறியவந்தது.

எனினும், சேதவிவரம் எதுவும் தெரியவரவில்லை.

(அ-1-207)

## புலிகளின் பகுதியில் கிளைமோர் தாக்குதல்

கொழும்பு, மே26

மன்னாரில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் புலிகள் பயணம் செய்த வாகனம் ஒன்றை இலக்கு வைத்து கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக படைத்தரப்பினர் தெரிவிக்கின்றனர்.

நேற்றுமுற்பகல் வெள்ளாங்குளத்திற்கும் பள்ளமடுவுக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் இத்தாக்குதல் நடத்தப்பட்டது என்றும் -

இத்தாக்குதலில் புலிகளின் பிரதேசப் பொறுப்பாளர் உட்பட மூன்று புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர் என்றும் பாதுகாப்புத் தரப்பினர் தெரிவிக்கின்றனர்.

எனினும், இது தொடர்பாக புலிகள் தரப்பிலிருந்து எந்தத் தகவல்களும் வெளியாகவில்லை. (சி)

## கண்காணிப்புக் குழுவினரின் கிளிநொச்சி விஜயம் ரத்து

கொழும்பு, மே26

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் லால் ஜோஹாஸ் சன்பேக் நேற்று கிளிநொச்சிக்கு செல்லவில்லை என்று கண்காணிப்புக் குழுப் பேச்சாளர் ஓமர்சன் தெரிவித்தார்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் நேற்று கிளிநொச்சிக்குச் சென்று புலிகளை சந்தித்து பேச்சு நடத்தவிருந்தார்.

ஆனால், கடைசி நேரத்தில் அந்தப் பயணம் ரத்தானது. இதற்கான காரணம் என்ன? என்பது குறித்துக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் எதுவும் தெரிவிக்கவில்லை. (சி)

## தென்மராட்சியில் இன்று முழுநாள் ஊரடங்கு

தென்மராட்சிப் பிரதேசத்தில் நேற்றிரவு 8 மணிக்கு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட ஊரடங்கு இன்று முழுநாளும் தொடர்ந்து நடைமுறையில் இருக்கும் என யாழ்.பொலீஸார் நேற்றிரவு தெரிவித்தனர்.

ஏனைய பிரதேசங்களில் நேற்றிரவு 8 மணிக்கு நடைமுறைக்கு வந்த ஊரடங்கு இன்று அதிகாலை 4 மணிக்கு நீக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

**வடக்கில்**
**இராணுவத்தின் புதிய களமுனையும் விடுதலைப் புலிகளின் புதிய களமுனையும்**
**நாளைய உதயனில் வாசியுங்கள்....**

# இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு அமெரிக்கா தீவிரமாகச் செயலாற்றும்

## இணைத்தலைமை நாடுகளுடன் ஆராய்ந்துள்ளதாகத் தகவல்

கொழும்பு, மே 26

**இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் வகையில் இலங்கை அதிகாரிகள், நோர்வே தரப்பினர், இணைத்தலைமை நாடுகளின் பிரதிநிதிகள் ஆகிய தரப்புகளுடன் நாம் இணைந்து தீவிரமாகச் செயலாற்றவுள்ளோம். எமது இந்தச் செய்தியை அவர்களுடன் பகிர்ந்து கொண்டிருக்கின்றோம்.**

அமெரிக்காவின் அரசுத்துறைப் பேச்சாளர் ரொம் கஷே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை வாஷிங்டனில் நடைபெற்ற வாராந்தச் செய்தியாளர் சந்திப்பில் அவர் இத்தகவலை வெளியிட்டார்.

அப்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் தற்போது அதிகரித்து வருகின்ற வன்செயல்கள் துரதிர்ஷ்டவசமானவை.

இலங்கை அரசும் விடுதலைப் புலிகள் அமைப்பும் மோதல்களைக் கைவிட்டு பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண வேண்டும் என்று நாங்கள் தொடர்ச்சியாக கேட்டுவந்துள்ளோம். நிச்சயமாக இலங்கை மக்களைப் பொறுத்தவரை அவர்களுக்கு அமைதிநிறைந்த ஒரு ஜனநாயக நாட்டில் வாழ்வதற்கான வாய்ப்புத்தரவேண்டும் என்று நாங்கள் விரும்புகின்றோம்.

ஆனால், அங்கு தற்போது நடக்கின்ற விடயங்களில் அதற்கான சூழ்நிலை தென்படவில்லை. இந்தப் பிரச்சினைக்கு தீர்வுகாணும் நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் வகை

(08ஆம் பக்கம் பார்க்க)

# மருத்துவத்துறைக்கு அனுமதி வழங்கக்கோரி 9 யாழ். மாணவர்கள் நீதிமன்றில் மனு

கொழும்பு, மே 26

தற்போதைய கல்வியாண்டில் பல்கலைக் கழக மருத்துவ பீடத்திற்கு அனுமதிக்கப்படுவதற்கான தகுதி இருந்தபோதிலும், அது மறுக்கப்பட்டதை எதிர்த்து-

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஒன்பது உயர்கல்வி மாணவர்கள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் கடந்த புதன்கிழமை வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் பாகுபாடான, அநீதியான கொள்கைகளாலேயே தமக்கு மருத்துவபீட அனுமதி கிடைக்கவில்லை என்று அவர்கள் தங்கள் மனுவில் தெரிவித்திருப்பதாக, சட்ட அறிஞர் வட்டாரங்களில் இருந்து அறியவருகிறது.

பல்கலைக்கழக அனுமதி, திறமை மற்றும் மாவட்ட அடிப்படையிலேயே வழங்கப்படுகிறது. கோட்டா முறையில் வழங்கப்படும் அனுமதியில் 'Z' ஸ்கோர் புள்ளிகளைக் கொண்டு 40 சதவீதமான மாணவர்கள் திறமை அடிப்படையில் தெரிவு செய்யப்படவேண்டும்.

இந்த வகையில் தேசிய மட்டத்தில் 29 மாணவர்கள் மருத்துவத்துறைக்கு திறமை அடிப்படையில் அனுமதி வழங்கியிருக்க

(08ஆம் பக்கம் பார்க்க)

## வென்னப்புவவில் 14 தமிழர்கள் கைது

கொழும்பு, மே 26

வென்னப்புவ போலவத்த என்ற இடத்திலுள்ள பாதணித் தொழிற்சாலையில் கடமையாற்றிக்கொண்டிருந்த 14 தமிழர்கள் வென்னப்புவ பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் நான்கு பெண்களும் அடங்குவர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். கைதுசெய்யப்பட்டவர்கள் அனைவரும் ஹட்டன், புஸ்ஸெல்லாவ போன்ற மலையகப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள். (சி)

## சோதனை நிலையங்களில் செஞ்சிலுவையின் கண்காணிப்புப் பணி; இருதரப்புகளும் இணங்கி பாதுகாப்பு உத்தரவாதம் தரவேண்டும்

கிளிநொச்சி, மே 26

வவுனியா ஓமந்தை மற்றும் மன்னார், உயிலங்குளம் சோதனை திறக்கப்படுவது தொடர்பாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதிக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்றது.

கடந்த 22ஆம் திகதி ஓமந்தை சோதனை நிலையத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தையடுத்து அங்கு கண்காணிப்பு பணியில் ஈடுபடுவதிலிருந்து செஞ்சிலுவைக் குழு வெளியேறியது. அது தொடர்பாக புலிகளுடன் பேசுவதற்காக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் இலங்கைக்கான பிரதிநிதி வன்னி வந்திருந்தார்.

புலிகளின் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கனை அவர் சந்தித்தார். கடந்த 22ஆம் திகதி ஓமந்தையில் நடந்த

(08ஆம் பக்கம் பார்க்க)

## தீவகத்துக்கான போக்குவரத்து சீரானது; நெடுந்தீவுக்கான படகுச் சேவை நிறுத்தம்

நல்லூர், மே 26

நெடுந்தீவில் வியாழக்கிழமை இடம்பெற்ற தாக்குதலை அடுத்து பிறப்பிக்கப்பட்ட ஊரடங்குச் சட்டம் காரணமாக அன்றைய தினம் பாதிக்கப்பட்ட தீவுப் பகுதிக்கான போக்குவரத்து நேற்றுக் காலை சீரானது.

எனினும், நெடுந்தீவுக்கான போக்குவரத்து நிறுத்தப்பட்டிருந்தது. அதனால் அங்கிருந்து வந்த பொது மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்ல முடியவில்லை. தொலைபேசி சேவைகள் ஸ்தம்பிதம் அடைந்ததால் அங்குள்ள நிலைமையைச் சரிவர அறியமுடியவில்லை.

நெடுந்தீவு குயின்ராக் பகுதியிலுள்ள கடற்படைத் தளத்தின்மீது நேற்றுமுன்தினம் அதிகாலை விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலை அடுத்து அன்றைய தினம் தீவுப் பகுதியில் முழுநேர ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருந்தது. இதனால் தீவகப் பிரதேசத்திற்கான போக்குவரத்துக்கள்

(08ஆம் பக்கம் பார்க்க)

## ரணிலோடு சேர்ந்து பத்திரிகையாளர் மாநாடு நடத்துவதா?

# இ.தொ.கா., முஸ்லிம் காங்கிரஸ் மீது கடுஞ்சீற்றம் கொண்டுள்ள அரசுத் தலைமை

கொழும்பு, மே 26

அரசுக் கூட்டமைப்பிலும் அமைச்சரவையிலும் இடம்பெற்றுக்கொண்டு, அதே சமயம் அரசுக்கு எதிராக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் ஒரே மேசையில் அமர்ந்திருந்து பத்திரிகையாளர் மாநாடு நடத்திய இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி போன்றவை மீது அரசுத்தலைமை கடுஞ்சீற்றத்துடன் இருப்பதாக விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

இச்சீற்றம் காரணமாக மேற்படி மூன்று கட்சிகளின் சார்பில் அமைச்சரவையில் இடம்பெற்றிருக்கும் அமைச்சர்களுக்கு, அடுத்த அமைச்சரவைக் கூட்டத்துக்கான அழைப்பு அனுப்பப்படாமல் போகலாம் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போதைய தேர்தல் முறையை மாற்றியமைக்கும் தேர்தல் சீர்திருத்தத் திட்டம் ஒன்றைக் கொண்டுவருவதற்கு அரசு முனைப்பாக நிற்கின்றது.

இந்த உத்தேச திட்டம் ஏனைய பெரும்

(08ஆம் பக்கம் பார்க்க)

## பாலித ஹோகன்ன கிழக்கே விஜயம்

கொழும்பு, மே26

அரச சமாதான செயலகத்தின் செயலாளர் நாயகமும் வெளிவிவகார அமைச்சின் செயலாளருமான கலாநிதி பாலித ஹோகன்ன நேற்று மட்டக்களப்புக்கு விஜயம் மேற்கொண்டார்.

அங்குசென்ற அவர் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் சமய, சமூகப் பிரமுகர்கள், ஐ.நா. அமைப்பின் பிரதிநிதிகள், போர்நிறுத்தக் கண்காணிப்பாளர்கள், படை அதிகாரிகள், சிவில் சமூகத்தினரையும் சந்தித்துக் கலந்துரையாடினார் என்று தெரிவிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசியமட்ட தமிழ்த்தினப் போட்டிகள் அடுத்த மாதம் 9, 10ஆம் திகதிகளில் கொழும்பில்

## குடாநாட்டில் இருந்து 26 மாணவர்கள்

தேசிய மட்ட தமிழ்த்தினப் போட்டிகள் எதிர்வரும் 9ஆம், 10ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறவிருக்கின்றன.

மத்திய கல்வி அமைச்சின் தமிழ்மொழிப்பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் பி.இராசையா இதனை அறிவித்துள்ளார்.

இந்தப் போட்டிகளில் பங்குபற்றத் தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள், பெற்றோர் ஆகியோருக்கான பயண ஏற்பாடுகளை யாழ்.செயலகம் செய்துள்ளது என செயலகத் திட்டப்பணிப்பாளர் ம.பிரதீபன் தெரிவித்தார்.

போட்டியாளர்கள் எதிர்வரும் 4ஆம் திகதியன்று கப்பலில் செல்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மாணவர்களின் விவரங்கள் மேலதிக கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அந்த விவரங்களை மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் சமர்ப்பிக்க வேண்டும். அதன் பின்னரே பட்டியல் இறுதியாக்கப்படும் என்று திட்டப்பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

குடாநாட்டில் இருந்து 9 போட்டிகளில் 26 மாணவர்கள் பங்குபற்றுவதற்கு தெரிவாகியுள்ளனர். போட்டிகளில் பங்குபற்றஅழைக்கப்பட்ட மாணவர்களின் விவரம் வருமாறு:

ஆனந்தராசா ஹரிசங்கர் (கொக்குவில் இந்து), க.சரணிகா (இந்து ஆரம்பப் பாடசாலை), ஜெ.வைஷ்ணவி (மானிப்பாய் மெமோரியல் ஆ.பா), பா.ஜஸ்திகா( இராமநாதன் கல்லூரி), ஜெ.பிரியவதனி (வேம்படி), பா.அபிராமி (இராமநாதன் கல்லூரி), எஸ்.சோபிகா, எஸ்.றோமியா, ம.வாசுகி, சி.ஷமீனா, ஏ.கனிதீபா, சி.சிவதாரணி, ஜே.கஸ்தூரி, தி.சர்மிளா, இ.கேதுஷா, சி.அனித்தா (இராமநாதன் கல்லூரியைச் சேர்ந்தவர்கள்).

கு.குணறோஜன், க.தனுஷன், கு.சங்கர், பா.கிறதீப, க.நிசந்தன், சி.பிரிசாந், அ.சண்முகப்பிரியன் (யூனியன் கல்லூரியைச் சேர்ந்தவர்கள்).

ப.தர்சுனந்த், ச.சொலமன், ச.கோபிநாத் (யாழ்.மத்திய கல்லூரியைச் சேர்ந்தவர்கள்).

(அ-1)

தெல்லிப்பழை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் (வ-து)

## கிளைக்குழுத் தேர்தல் 2007

*சங்கத்தின் கிளைக் குழுத் தேர்தல் 2007 யூன் மாதம் நடைபெறவுள்ளது. கிளைகளின் வாக்காளர் இடாப்பு 28.02.2007 ஆம் திகதியுடன் முடிவுறுத்தி காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. அங்கத்தவர்கள் இடம்பெயர்ந்து வேறு தொழிற் பிரதேசத்தில் உள்ளமையால் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு தமது அங்கத்துவத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன்.*

*24.05.2007*
*புகையிரத நிலைய வீதி, மல்லாகம்.*

செ. திருஞானம்
செயலாளர்.

## அமுதசுரபியின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை



நயினை சிவஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள் அவர்கள் நயினைத் தாயின் அருந்தவப் புதல்வனும் அந்தணர் குலதிலகமும் சிவாச்சாரிய சிகரமும் நயினை நாகபூசணி அம்மன் கோயில் ஆதீன பரம்பரைக் குருமணியுமான சிவஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள் அவர்கள் நயினை ஸ்ரீ நாகபூசணி அம்பிகையின் பாதார விந்தங்களைப் பற்றிவிட்டார். அவரின் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல நாயகியின் திருவடிகளை இறைஞ்சி நிற்கின்றோம். இவ்வுலகில் சிவாச்சாரியாரின் இழப்பு சைவ உலகத்தால் ஈடு செய்ய முடியாததென்பதை உணர்ந்து கண்ணீர் மல்கிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரதான சாலை,
நயினாதீவு 2 (சி/52491)

நயினாதீவு வாழ் மக்கள் சார்பில்,
நிர்வாகம்,
ஸ்ரீ நாகபூசணி அமுதசுரபி அன்னதான சபை.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

நிலைத்துவாழ உதித்தது 1938 ★ 09 ★ 04



நிமிடத் துடிப்பில் பிரிந்தது 2007 ★ 04 ★ 26

### திருமதி ஜோன் தம்பிஜயா தனலட்சுமி

(ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர் - ஆதார வைத்தியசாலை - பருத்தித்துறை)

கருவறைக்குள் கருகொண்ட போதே
மரணம் என்பது மறைக்கப்படவில்லை
ஆனால்....
மனதைப் பிழியும் மரணங்கள்.....
வாழ்வின் இயல்பையே இடி விழுத்திச் செல்கின்றன
உங்கள் மரணம் கூட உணர்வுக்குள்
உரைக்கப்பட முடியாமல்
உள்ளத்தை உருக்குவதை யார்க்கு உரைப்போம்.
தெய்வமே சிறகுக்குள் அடைகாத்த
தாய்ப் பறவையை ஆத்ம சாந்தி கொடுத்து
அணைத்திடு.... உன் அருகில்!

(60986)

*புதுத்தோட்டவீதி,*
*கரவெட்டி, நெல்லியடி.*

உம் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### முருகேசு காங்கேசு

**(இளைப்பாறிய நிர்வாக உத்தியோகத்தர் - மாநகர சபை, கச்சேரி, யாழ்ப்பாணம்)**



ஐயாகடையடி, மீசாலையைப் பிறப்பிடமாகவும் தமோதரம்பிள்ளை வீதி, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு காங்கேசு 22.05.2007 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு - காசிப்பிள்ளை தம்பதியரின் செல்வப்புதல்வனும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை- நல்லம்மா தம்பதியரின் மருமகனும் ராசமணியம்மாவின் (இளைப்பாறிய ஆசிரியை) அன்புக் கணவரும் காலஞ்சென்ற திருச்செல்வம் (கிராம அலுவலர்) அவர்களின் அன்பு மைத்துனரும் திருமதி யோ.திருச்செல்வத்தின் (இளைப்பாறிய முகாமையாளர், இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்) உடன்பிறவாச் சகோதரனும் ஞானசபேசன் (கனடா), ரஞ்சிதமலர் (கனடா), ஞானச்சந்திரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சத்தியதேவி (கனடா), சிங்காரவேல் (கனடா), நளாயினி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனும் நிக், அன்ரு, ஜெனி, ரகுநாத், ரஞ்சித், கிருஷ், அனோஜ் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற சதாசிவம், காலஞ்சென்ற ஆறுமுகம் தங்கமுத்து, நவரத்தினம் பொன்னுப்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியை - கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.05.2007) ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொற்புலவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*தகவல்:*
மனைவி, மக்கள்
பேரப்பிள்ளைகள்.

தாமோதரம்பிள்ளை வீதி,
சாவகச்சேரி. (60988)


நாகம்ஸ் சினிமா சுன்னாகம்

பல மாதங்கள் இடைவெளியின் பின்
விஜய், அசின், வடிவேல் நடித்த
(றீல்ஸ்) போக்கிரி
தினசரி : 11மணி, 3மணி. இறுதி வாரம்



கோழி இறைச்சி விற்பனைக்கு

பிறிமா கோழி இறைச்சி வேண்டிய அளவுகளில் பெற்றுக் கொள்ளலாம்.
மல்ரி பாம் சென்ரர்
61, இராமநாதன் வீதி, கலட்டி,யாழ். (மிகவிரைவில் தொடர்பு எண்)

Sky Computer System

No.89, Kandy Road, Chundikuli, Jaffna.
Hot-line: 021 222 9109

Kingston DDR 256MB 3750/-

Power tree UPS
Hp Printer (DeskJet)
Flash Drive 2GB(Kingston)
Samsung Hard Disk80GB SATA
Samsung Hard Disk80GB IDE
15"Monitor (Samsung)
ATX Casing (Mercury)

Mother Board (ASUS LGA) DVD Writer (Samsung).
Mother Board (Mercury 478) Combo Drive (Samsung).
CD Drive (ASUS) Epson Printer (Lq300+II).
Modem.

ஞாயிறு திறந்திருக்கும்
கச்சேரிக்கு அருகில்

விமானப் பொதிகள் சேவை

உங்கள் பொதிகள் யாழ்.-கொழும்பு அல்லது கொழும்பு-யாழ். தினசரி விமானம் மூலமாக உடனடியாக அனுப்பி வைக்கப்படும். வியாபாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். கிளியரன்ஸ் இல்லாத பொருள்களுக்கு M.O.D பெற்று உத்தரவாதத்துடன் அனுப்பி வைக்கப்படும்.

EURO GROUP
077 3846998, 011 4542190


யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய
பழைய மாணவர் சங்கத்தின்

## வருடாந்த பொதுக்கூட்டம் 2007

*மேற்படி கூட்டம் 27.05.2007 ஞாயிறு (நாளை) காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்கும்படி அன்புடன் அழைக்கின்றோம்.*

(60956)

செயலாளர்
ப.மா.சங்கம்

## நீங்கா நினைவுகளுடன் மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 17 ★ 09 ★ 1950



உதிர்வு 28 ★ 05 ★ 2004

### அமரர் சுந்தரம் மோகன்

*அன்பையும் அரவணைப்பையும்*
*நீங்கள் அளிக்க*
*இன்ப நிகழ்வுகளில் நாம் மிதந்தோம்*
*அன்று கனவுகளிலும் நாம் சிரித்தோம்*
*இன்று அந்த நிகழ்வுகளை இழந்த நிலை*
*தினமும் கலங்குகின்றோம் கனவில் கூட*

ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டுகின்றோம்

தாய், மனைவி,
சகோதரன், மைத்துனர்கள்,
மருமக்கள், பெறாமக்கள்.

நாச்சிமார் கோயிலடி,
கட்டுவன் தெற்கு,
கட்டுவன். (சி-52485)


யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற ஆதரவுடன்
தியாகி அறக்கொடை நிறுவனம்
நடத்தும் 4மாத கால அழகுக் கலைப் பயிற்சி நெறி

கேக் ஐசிங், உணவு தயாரித்தல், பூவேலை, அழகுக் கலை (Facial), சிகை அலங்காரம் (Hair style) மற்றும் Fabric Painting பயிற்சிகள்

இடம்: தியாகி அறக்கொடை நிறுவனம்
527, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
ஆரம்பம்: 04.06.2007 (திங்கட்கிழமை)
இன்று முதல் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

தொடர்புகளுக்கு:
தியாகி அறக்கொடை நிறுவனம்,
527, நாவலர் வீதி, நல்லூர்.
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல:
077 6917697
071 4182395
021 222 8025

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்
T.R.R.O Computer Training Center

கணனிப் பயிற்சி நெறிகளுக்கான
புதிய பிரிவுகள் ஆரம்பம்....

- Diploma Courses -
Introduction to computers & Windows
Diploma in Microsoft Office XP
Diploma in Desktop Publishing

காலம் 4 மாதம்
பதிவுக் கட்டணம் மட்டும் அறவிடப்படும்.

-Certificate Courses-
Microsoft Word XP
Microsoft Excel XP
Microsoft Access XP
Adobe Pagemaker 7.0
Adobe Photoshop 7.0
Corel Draw 12

விண்ணப்பப்படிவங்களை இங்கே பெறலாம்
T.R.R.O Computer Training Center
106, 4th Cross Street,
Jaffna.
Branch Office:- MC Leod Hospital
K.K.S. Road Inuvil.

09.06.2007
(சனி காலை 10 மணி)
11.06.2007
(திங்கள் காலை 10 மணி)
ஆகிய தினங்களில் பயிற்சி வகுப்புகள் ஆரம்பமாகும்.

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்
106, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 021 222 2416


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐரோப்பிய ஒன்றியம் எடுத்த முடிவு: விமர்சிக்கிறார் நோர்வே அமைச்சர்

ஒஸ்லோ,மே 26

ஐரோப்பிய ஒன்றியம் கூட்டாக எடுத்த நிலைப்பாடானது தனிப்பட்ட ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகள் அமைதி முயற்சிகளுக்கு பங்களிப்புச் செய்வதைக் கடினமாக்கி விட்டது அல்லது சாத்தியமற்றதாக்கிவிட்டது. இலங்கையில் என்ன நடந்தது என்பதை தமிழீழ விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகள் பட்டியலில் ஐரோப்பிய ஒன்றியம் சேர்த்தமையை உதாரணமாகக் கூறலாம்.

இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார் நோர்வே வெளியுறவு அமைச்சர் ஜோனஸ் காஹர் ஸ்டோர். ஒஸ்லோவில் நடந்த வருடாந்த ஐரோப்பிய மாநாட்டில் அமைச்சர் உரை நிகழ்த்தினார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் முடிவை அடுத்து இலங்கை கண்காணிப்புக் குழுவில் பணிபுரிந்த ஐரோப்பிய ஒன்றிய உறுப்பினர்கள் குடிமக்களுக்கான பாதுகாப்பு உத்தரவாதத்தை விடுதலைப் புலிகள் வாபஸ் வாங்கிக் கொண்டனர். அதன் விளைவாக சுவீடன், டென்மார்க், மற்றும் பின்லாந்து ஆகிய நாடுகள் தமது அங்கத்தவர்களை விலக்கிக் கொள்ள நேர்ந்தது. அதே விதமாக நோர்வேயும் செயற்பட்டிருந்தால் அங்கு பணியாற்றுவதற்கு எவரும் மிஞ்சி இருந்திருக்கமாட்டார்கள் என்று அவர் மேலும் கூறினார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் பொதுவான வெளிநாட்டு மற்றும் பாதுகாப்பு கொள்கைகளை உருவாக்கி தீர்மானிக்கும் செயற்பாட்டிலிருந்து நோர்வே விலகி இருந்தமையால் அமைதி முயற்சிகளுக்கு வழமையாகத் தேவைப்படும் ஓரளவு இணக்கப்பாடான ராஜதந்திரத்துடன் ஈடுபட்டுவருவதற்கு எம்மால் முடிந்துள்ளது. - என்றும் நோர்வே வெளிநாட்டு அமைச்சர் கூறினார். (ப)

# பலாலி ராணுவத் தளம் மீது பாரிய தாக்குதல் நடத்த புலிகள் ஆயத்தம்

## பிரிகேடியர் முனசிங்கவின் கணிப்பு

கொழும்பு,மே 26

தமிழீழ விடுதலைப் புலிகள் பலாலி இராணுவத் தளத்தின் மீது விமானத் தாக்குதல் ஒன்றை நடத்தக்கூடிய சாத்தியக் கூறுகள் தென்படுகின்றன. பலாலி தளத்தைத் தாக்குவது விடுதலைப் புலிகளின் இராணுவ வியூகத்தின் மிக முக்கிய அம்சமாக இருக்கும்.

பொல்காவளை ஐ.தே.க.அமைப்பாளரும் முன்னாள் இராணுவப் பேச்சாளருமான பிரிகேடியர் சரத் முனசிங்க மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்கு பெரும் எடுப்பில் தாக்குதல் ஒன்றை நடத்துவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் திட்டமிட்டு வருகிறார்கள். நெடுந்தீவில் நடத்தப்பட்டுள்ள தாக்குதல் இந்த வகையில் முதல் கட்டமென்றே கொள்ளவேண்டும்.

கிழக்கு மாகாணம் பத்திரமாக இருக்கிறது என்ற கூற்றை பிரிகேடியர் முனசிங்க ஏற்றுக்கொள்ள மறுத்தார். பயங்கரவாத அமைப்பு ஒன்று செயற்பட்டுவரும் வேளையில் எந்த ஓர் இடமும் பத்திரமாக இருப்பதாகக் கூறமுடியாது. கொழும்பில் நடந்துள்ள குண்டுத் தாக்குதல் இதை நிரூபிக்கின்றது - என்றார். (ப)



அச்சுவேலியைச் சேர்ந்த கணவரை இழந்த தம்பிரத்தினம் அழகேஸ்வரிக்கு சுய தொழில் முன்னேற்றத்துக்கென செலிங்கோ நிறுவனத்தின் ஸ்தாபகர் தேசமான்ய லலித் கொத்தலாவலவின் சரணா நிதியிலிருந்து ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபா நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. நிதிக்கான காசோலையை பிராந்திய முகாமையாளர் மு.இரகுநாதன் பயனாளியிடம் கையளிப்பதைப் படத்தில் காணலாம்.

*(படம் : லக்ஸ்மன்)*

## நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,மே26

திருமறைக் கலாமன்ற இலக்கிய அவை 'ஈழத்து இலக்கியப் புலத்தில் வரதர்' என்னும் தலைப்பில் இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு திருமறைக் கலாமன்றக் கலைத்தூது மணி மண்டபத்தில் கருத்தரங்கு ஒன்றை நடத்தவுள்ளது.

இதில் 'வரதரின் இதழியல் பணி' என்னும் தலைப்பில் பேராசிரியர் அ.சண்முகதாஸும் 'வரதரின் வெளியீடுகள்' என்னும் தலைப்பில் செங்கை ஆழியான் கலாநிதி க.குணராசாவும் 'வரதரின் சிறு கதைகள் என்னும் தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக தமிழ்த் துறை விரிவுரையாளர் ஈ.குமரனும் உரை நிகழ்த்தவுள்ளனர். (203)

* * *

யாழ்ப்பாணம்,மே26

கரித்தாஸ் - கியூடெக் தென்மராட்சிக் குழுக்கள் இணைந்து நடத்தும் 'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்' விற்பனைக் கண்காட்சி இன்று சாவகச்சேரி றோமன் கத்தோலிக்க பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

தென்மராட்சி பிராந்தியத் தலைவர் சி.தயாளினி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கியூடெக் கரித்தாஸ் நிறுவன இயக்குநர் அருட் பணி கி.யோ.ஜெயக்குமார் அடிகளார் கலந்து கொள்ளவுள்ளார். (203)

* * *

யாழ்ப்பாணம்,மே26

தென்னிந்தியத் திருச்சபையின் யாழ். ஆதீனம் யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிகள் பிரிவில் நடத்திவரும் கிறிஸ்தவ தொடர் கருத்தமர்வில் இன்று பரீட்சை வினா - விடை இடம்பெறவுள்ளது.

காலை 9 மணிமுதல் பிற்பகல் ஒரு மணி வரை நடைபெறவுள்ள இக்கருத்தமர்வில் [illegible]னித பத்திரிசியார் கல்லூரி ஆசிரியை திரு[illegible]தி மல்லிகா, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி ஆசிரியை திருமதி அனிதா வெனிஸ்சியா ஆகியோர் கருத்துரை வழங்கவுள்ளனர். (203)

## வாசகர் திருமுகம்

### தாமதமாகும் பாரஊர்திச் சேவைக் கட்டணம்

யாழ்.குடாநாட்டிற்குக் கப்பல் மூலம் எடுத்துவரப்படும் பொருள்களை துறைமுகத்திலிருந்து கோண்டாவில் களஞ்சியசாலை வரை எடுத்துச்செல்லும் பாரவூர்திக்கான சேவைக் கட்டணங்களை வழங்குவதில் நீண்ட காலதாமதம் காட்டப்படுகிறது.

ஏ-9 வீதி மூடப்பட்டதைத் தொடர்ந்து மாற்று வருமான வ்ழிகள் இன்றித் தவிக்கும் நாம், கப்பல் பொருள்களை விநியோகிப்பதன் மூலம் பெறப்படும் வருமானத்தைக் கொண்டே எமது அன்றாட ஜீவனோபாயத்தை நடத்தவேண்டியுள்ளது. அதனைக் கருத்திற் கொண்டே எமது பாரவூர்திகளை இச்சேவையில் ஈடுபடுத்த முன்வந்தோம்.

இவ்வருடம் ஜனவரி மாதம் தொடக்கம் இன்று வரை (22.05.2007) 30 தடவைகளுக்கு மேல் சேவையில் ஈடுபட்டுள்ளோம். ஆனால், எந்த ஒரு சேவைக் கட்டணமும் இன்னமும் வழங்கப்படவில்லை. இதனால் மிகப் பெருந்தொகையான முதலை (30 தடவை x ஒரு தடவைக்கான கட்டணம் ரூ 5000 = 150,000/=) கப்பல் சேவை யில் முடக்கி விட்டு செய்வதறியாது தவிக்கின்றோம்.

உரிய அதிகாரிகள் எமக்குரிய கட்டணத்தை வழங்குவதில் அசமந்தம் காட்டுவது ஏன்? அவர்களுக்கு வேலைப்பளு என்று கூறலாம். ஆனால், இந்த வருமானத்தையே நம்பியிருக்கும் எமது கதி என்ன? எமது குடும்பங்கள் பட்டினி கிடப்பதா? எமது முதலை முடக்கி விட்டு நாம் ஏதிலிகளாகத் திரிவதா? இந்த எல்லையற்ற தாமதத்துக்கு வேறு காரணங்கள் உண்டா என்ற சந்தேகங்கள் எம் போன்றவர் மத்தியில் எழத் தொடங்கியுள்ளன. அதனை மனதிற்கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எமக்குரிய பணத்தை - எமது நாளாந்தச் செலவுகளுக்கு எதிர்பார்த்திருக்கும் பணத்தை - தாமதமின்றி விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

*யாழ்ப்பாணம்.*

- பாதிக்கப்பட்டவர்.

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,மே26

உரும்பிராய் பர்வதவர்த்தனி அம்மன் ஆலய புதிய சப்பர வெள்ளோட்ட விழா நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சப்பரத் திருவிழா எதிர்வரும் 29ஆம் திகதியும் தேர்த்திருவிழா 30ஆம் திகதியும் தீர்த்தத் திருவிழா 31ஆம் திகதியும் இடம்பெறவுள்ளன. (203)

* * *

கரவெட்டி நுணுவிற் குளக்கோட்டு விநாயகர் ஆலயப் பெருந்திருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 30ஆம் திகதி தேர்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (203)

* * *

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை உதயதிசை புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா எதிர்வரும் 4ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நவநாள் ஆராதனைகள் இடம்பெறும்.

எதிர்வரும் 13ஆம் திகதி புதன்கிழமை காலை 6.30 மணிக்கு பங்குத்தந்தை எக்ஸ். டபிள்யூ. ஜேம்ஸ் அடிகளார் தலைமையில் திருவிழாத் திருப்பலி நடைபெறும். தொடர்ந்து திருச்சொரூபப் பவனியும் புனிதரின் ஆசிரும் இடம்பெறும். (203-51)

### பண்டத்தரிப்பு கூட்டுறவுச் சங்கம் விவசாயிகளிடம் எள் கொள்வனவு

வலி.தென்மேற்கு,மே 26

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் தனது பிரிவுக்குட்பட்ட விவசாயிகளிடமிருந்து எள்ளைக் கொள்வனவு செய்து வருகின்றது.

சங்கத்தின் கிளைகள் ஊடாக ஒரு கிலோ எள் 110 ரூபாவுக்கு கொள்வனவு செய்து வருகின்றது. இச்சங்கம் கடந்த பல வருடங்களாக நல்லெண்ணெய் உற்பத்தி செய்து தனது கிளைகள் ஊடாக விற்பனை செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை பண்டத்தரிப்பு, மாதகல், சில்லாலை ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட எள் செய்கை எதிர்பார்த்த விளைச்சலைத் தரவில்லை என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (202-135)

---

#### மாகாண மட்ட துடுப்பாட்டப் போட்டி

# வடக்கு - கிழக்கு மாகாண அணிக்கு யாழ்.மாவட்ட வீரர் ஐவர் தெரிவு

யாழ்ப்பாணம்,மே 26

மாகாண மட்டத்தில் ஸ்ரீ லங்கா கிரிக்கெட் சபை யின் அனுசரணையுடன் நடத்தப்படவுள்ள துடுப்பாட்டப் போட்டிகளில் கலந்துகொள்வதற்கு வடக்கு - கிழக்கு மாகாண அணியில் யாழ். மாவட்ட வீரர்கள் ஐவர் தெரிவாகியுள்ளனர்.



ரி.ஜெகநாதன் ஆர்.ஏ.பிரசாத் ப.நேசவர்மன் வோ. இ.ஜக்ஸன் எஸ்.வினோத் எம்.அமரதீசன்

ஆர்.ஏபிரகாம் பிரசாத் (யாழ். மத்திய கல்லூரி), ப.நேசவர்மன்,(பரியோவான் கல்லூரி), வோ. இ.ஜக்ஸன்(சென் பற்றிக்ஸ் கல்லூரி), எஸ். வினோத்(மானிப்பாய் இந்துக் கல்லூரி), எம்.அமரதீசன் (யாழ்ப்பாணக் கல்லூரி) ஆகியோரே இந்த அணிக்குத் தெரிவாகியுள்ளனர்.

இவர்கள் போட்டிகளில் பங்குபற்றுவதற்கு கடந்த 23ஆம் திகதி கண்டிக்குச் சென்றுள்ளனர்.

இவர்களுக்குப் பொறுப்பாக ரி.ஜெக நாதன் கடமையாற்றுகின்றார்.

20 வயதிற்குட்பட்ட தேசிய அணி ஒன்றை இலங்கையில் உருவாக்குவதற்கு இப் போட்டிகளின் மூலம் வீரர்கள் தெரிவுசெய்யப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (203)

## எல்லாளன் வி.க. வெற்றி

யாழ்ப்பாணம்,மே 26

புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகத் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் நவக்கிரி எல்லாளன் வி.க. அணி 3 கோல்களால் வெற்றிபெற்றது.

நவக்கிரி எல்லாளன் விளையாட்டுக் கழகத்துக்கும் அச்செழு வளர்மதி விளையாட்டுக் கழகத்திற்கும் இடையே நடைபெற்ற இந்த ஆட்டத்திலேயே எல்லாளன் வி.க. 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

## விளையாட்டு

### சதுரங்கப் போட்டி

யாழ்ப்பாணம்,மே 26

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான சதுரங்கப் போட்டிகள் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் காலை 8.30 மணிமுதல் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

இன்று 15, 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கும், நாளை 15, 19 வயதுப் பிரிவு பெண்களுக்குமான போட்டிகள் நடத்தப்படவுள்ளன. (203)

# யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் சுற்றுப்போட்டி இன்று ஆரம்பம்

யாழ்.உதைபந்தாட்ட லீக் ,ஏழு பேர் கலந்துகொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் கொய்யாத்தோட்டம் ஐக்கிய வி.க. மைதானத்தில் இப்போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இப்போட்டியில் [illegible] ரனீஸ் வி.க., குருநகர் பாடுமீன் வி.க., சென் றோக்ஸ் வி.க., கிறீன் கிங்ஸ் வி.க., கொட்டடி கலைவாணி வி.க., நாவாந்துறை சென். மேரிஸ் வி.க., மற்றும் சென்நீக்கலாஸ் வி.க. ஆகியன கலந்துகொள்ளவுள்ளன.

இன்று காலை 9 மணி, முற்பகல் 10 மணி, பிற்பகல் 3 மணி, மாலை 4 மணி ஆகிய நேரங்களிலும் நாளை ஞாயிற்றுக்கிழமை [illegible] ஆகிய நேரங்களி[illegible] போட்டிகள் இடம்பெற்று மாலை 4 மணிக்கு இறுதிப் போட்டி நடைபெறும். (203-51)

## மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,மே 26

மட்டுவில் குடும்ப முன்பள்ளி சிறார்களின் மெய்வன்மைப் போட்டிகள் இன்று சனிக்கிழமை மட்டுவில் சந்திர மௌலீச வித்தியாலய மைதானத்தில் தென்மராட்சி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (முன்பள்ளி) சு.பாக்கியராசா தலைமையில் நடைபெறும். (203-207)

* * *

யாழ்ப்பாணம்,மே26

கொடிகாமம் குடும்ப முன்பள்ளி சிறார்களின் மென்வன்மைப் போட்டிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை மீசாலை வீரசிங்கம் மகா வித்தியால மைதானத்தில் தென்மராட்சி வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் (முன்பள்ளி சு.பாக்கியராசா தலைமையில் நடைபெறும். (203-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

எமது சக உத்தியோகத்தர்
செல்வி வ.வசந்தமதி அவர்களின் அன்புத் தாய்
**திருமதி வடிவேலு சின்னம்மா**
அவர்களின் மறைவிற்காக அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அவரது ஆத்ம சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்,
சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை,
சாவகச்சேரி.

(60930)



மல்லாகம் பெரியதம்பிரான்
பெரிய நாயகித் தாயார் திருக்கோயில்
**பெரும் பொங்கல் பெருவிழா**
**27.05.2007**

சாடியடி உறைந்தருள்பாலிக்கும் பெரியதம்பிரானின் பொங்கல் பெருவிழா முன் நிகழ்வாக இன்று (26.05.2007) சனிக்கிழமை காலை 7 மணிக்கு அபிஷேக ஆராதனையுடன் ஆரம்பித்து பொங்கல் சிறப்பு நிகழ்வுகள் தொடரும்.

நண்பகல் 12 மணிக்கு விஷேட பூசையுடன் அடியார்களுக்கு விபூதிப் பிரசாதம் வழங்கப்பட்டு அனைவருக்கும் எம்பெருமான் கருணையால் அன்னதானம் வழங்கப்படும்.

பிற்பகல் 2 மணிக்கு எம்பெருமானுக்கு ...ளந்துப் பூசை ஆரம்பித்து வீதியுலா மல்லாகம் சந்தியூடாக ...ன்ற வீதியை அடைந்து பெரியதம்பிரான் கோயிலை வந்தடை...

நாளை (27.05.2007) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு எம்பெருமானுக்கு அபிஷேக ஆராதனைகள் ஆரம்பித்து விஷேட பூசையுடன் தீ மிதிப்பு வைபவம் நடைபெறும்.

நிறைவாக அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். எம்பெருமான் அடியார்கள் யாவரும் விழாவில் பங்குகொண்டு எம்பெருமான் அருள்பெற்றுய்யுமாறு அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

பூசகர்.

(60921)

## அழியா நினைவுகளுடன்
## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
11 ✱ 03 ✱ 1972



மறைவு
26 ✱ 04 ✱ 2007

அமரர் **தங்கராசா ரமணன்**

சிவபதமடைந்த எமது அன்புச் செல்வத்தின் அந்தியேட்டி கிரியைகளும் ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளும் இன்று (26.05.2007) சனிக்கிழமை காலை 6 மணியளவில் எமது இல்லத்தில் இடம்பெறும். இந்நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்பாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

(தயவுசெய்து தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்).

'தங்கநிலா',
அல்வாய் தெற்கு, வதிரி. (60864) குடும்பத்தினர்.

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்ப வயது 36 ஆசிரியராகக் கடமையாற்றும் சுவாதி, செவ்வாய் தோஷமற்ற பெண்ணுக்கு பொருத்தமான வரன் உள்நாட்டிலோ/ வெளிநாட்டிலோ தேவை. சீதனம் பேசித் தீர்மானிக்கலாம். தொடர்பு: 0776673078

(60900)

சர்வதேசரீதியில் (இலங்கையிலும்) முன்னணியிலுள்ள Accounting Software களினூடாக Company Accounts இனையும் உள்ளடக்கி

**Diploma in Computerized Accounting**

**ACCPAC + Quick Books Premier + MYOB**

Course Contents
- Manual Accounting
- Financial Accounting
- Cost Accounting
- Taxation (Including VAT)
- Stock Control
- Bank Reconciliation
- Budgeting

வகுப்புக்கள் ஆரம்பம்:
27/05/2007 - Sun
28/05/2007 - Mon
02/06/2007 - Sat
03/06/2007 - Sun

கற்கைநெறியின் நன்மைகள்:
1. Accounts இனை கணனிமயப்படுத்தல் தொடர்பான முழுமையான விளக்கம்
2. Multy User Accounting Software களில் Network ஊடான கணக்குபதிவு முறைகள்.
3. VAT தொடர்பான கணக்குபதிவு முறைகள்.
4. வரையறையற்ற செய்முறை பயிற்சிகளுடன்...!

**COMPUTER EXPRESS**
INSTITUTE OF INFORMATION TECHNOLOGY
#15, Sirambiyadi Lane, Jaffna
Branch : #167, Kasthuriyar Rd, Jaffna.
PHONE : 021-222 8250 , 0777 222 422

## கொழும்பு - யாழ் - கொழும்பு விமான சேவை

கொழும்பு - யாழ். விமானப் பயணிகளின் நலன் கருதிப் புதிய பயணிகள் விமான சேவை விரைவில் ஆரம்பிக்கப் படவுள்ளது.
பொதிகளும் ஏற்றுக்கொள்ளப்படும். முன்கூட்டியே உங்கள் ஆசனங்களைப் பதிவுசெய்து கொள்ளவும்.
மேலதிக விவரங்களுக்கு:
EURO GROUP
077 3846998
011 4542190

(சி/52441)

## STUDY IN LONDON
**Spot Admission**
**Hurry for the June - July Batch**

WITHOUT IELTS

IELTS இல்லாமல் எனக்கு College admission கிடைத்ததையிட்டு பெரும வாய்ப்பாகக் கருதுகின்றேன். பகுதிநேர வேலையினையும் என்னால் பெறமுடிந்தது. அனுமதி பெற்ற மாணவன்

Dip. in Export & Import Mgt. Dep in Shopping & Logistic Mgt. Adv Dip in Tourism Mgt. Bachelor of Bus Administration (BBA), Master of Bus Administration (MSc). Information Technology. Master of Information Tech. Bachelor in Law (LLB). Master in Law (LLM), M.A. in Education, Hotel Mgt, Msc in Health Mgt. Msc International Banking & Finance, BSc Accounting Finance, International Marketing, Adv Dip in Travel & Tourism Mgt. Cabin Crew & Many More Courses...

**Admission Letter within 5 days**

- பல்துறை சார்ந்த Diploma Degree, Master Degree கற்கைநெறிகள்.
- 60 இற்கு மேற்பட்ட University / College இனை தெரிவுசெய்யும் வாய்ப்பு
- Part time வேலை Airport ஒழுங்கு குறைந்த கட்டணத்தில் வதிவிட வசதிகள் செய்து தரப்படும்.
- அனுபவமும் தனித்துவமுள்ள சட்டத்தரணிகளால் விசா 100% பெற்றுகொள்ள உதவி செய்து தரப்படும்

Eisc **EXPRESS**
INTERNATIONAL STUDIES & CONSULTANTS
#15, Sirambiyadi Lane, (Off Stanly Rd.) Jaffna
Phone : 021-222 8250, 0777 222422

## 13ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**திரவியம் திருநாவுக்கரசு**
பிறப்பு
09-06-1934
இறப்பு
26-05-1994

அம்மா உங்கள் அன்பு முகம்
மறைந்து பதின்மூன்று ஆண்டுகள் ஆனதோ
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல முருகனை பிரார்த்திக்கின்றோம்.

முருகமூர்த்தி வீதி,
சங்கானை. (60925) குடும்பத்தினர்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
30 - 06 - 1989



ஆண்டவன் அடியில்
26 - 05 - 2005

செல்வி **மேரி தியோஜினி சூசைதாஸ்**

எண்ணிரண்டு ஆண்டுகள்
எம்மோடு கூடிக் கழித்த எம் அன்புச் செல்வமே!
விண்ணுலகம் நாடிச்சென்று
நாலாறு திங்கள் நகர்ந்தாலும்...
பாசமுடன் வாழ்ந்த பசுமை நிறை நினைவுகளில்...
தேறுதல் நாம் பெறுகின்றோம் தேன்மொழியே!

என்றும் நெஞ்சில் நிறைந்திருக்கும்:
அன்பு நிறை
பெற்றோர், சகோதரர்,
உறவினர்.

சண்டிலிப்பாய் வீதி,
பண்டத்தரிப்பு. (60790)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
26 - 06 - 1948



உதிர்வு
12 - 04 - 2007

அமரர் *ராசலிங்கம் ஸ்ரீஸ்காந்தவேல்*
(சாரதி)

அன்புடன் அறிவூட்டி
ஆசையுடன் வளர்த்தெடுத்த
அன்புத் தந்தையே!
காலனவன் கண்பட்டு
வந்ததோ ஒரு துயரம்!
பாசத்துடன் வளர்த்தெடுத்த
அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடை
கண்ணீர் பூக்கொண்டு பிரார்த்திக்கின்றோம்.

தகவல்:
ரஜனிகாந் (பாஸ்கர் - மகன்)
குடும்பத்தினர்


'சந்திரஉதயம்'
தொண்டைமானாறு. (60912)

## 6 ஆம் ஆண்டு நினைவிலே | 31 ஆம் நாள் நினைவிலே



மண்ணக மலர்வு
20.03.1918 12.05.1924

விண்ணக அமர்வு
10.05.2001 26.04.2007



அமரர்
**நாகர் கிருஷ்ணபிள்ளை**
(செட்டியார்)

திருமதி
**கிருஷ்ணபிள்ளை தங்கப்பொன்**

எங்கள் வாழ்வில் என்றும் ஏற்றமிகு சூரிய சந்திரராய்
தங்கள் விழுதுகள் இங்கு தாமிணைந்து வாழ்ந்திட
உங்கள் ஆசிகள் வேண்டி உறவுகள் சேரும் இந்நாளில்
மங்காமல் உங்கள் நினைவை மீட்டி நின்று
வணங்குகின்றோம்

'தவமஹால்',
அல்வாய். (60913) குடும்பத்தினர்

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொய[illegible]ர் [illegible]P [illegible](ICE) வேண்டிய [illegible] நிறையில் பெற்றுக்கொள்ளலாம்.

நல்லூர்
பாம் சென்ரர்,
19, முருகேசர் லேன்,
நல்லூர்.

(60943)

## இறைச்சிக்கோழி

ஐஸ் புறொயிலர் இறைச்சி, கல்பேட் இறைச்சி என்பன விற்பனைக்குண்டு.

NEW
R.S.K. Farm,
[illegible]

(60645)

## மரண அறிவித்தல்

**தர்மலிங்கம் சிவகணேசமூர்த்தி (கணேஸ்)**
(முன்னாள் பொலீஸ் உத்தியோகத்தர்)

மகாதனை, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் சிவகணேசமூர்த்தி கடந்த 18.05.2007 அன்று ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் செல்வப்புதல்வனும் காலஞ்சென்ற கனகசுந்தரம்- தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும் புவனதேவியின் அன்புக் கணவரும் கௌரிநாத், சிவதர்சினி, லோஜினி ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், இந்திராதேவி, விமலாதேவி (கொழும்பு), சரஸ்வதிதேவி (கனடா) ரவீந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு சகோதர ரும், புவனேஸ்வரி (கொழும்பு), புவனகாந்தன் (கனடா), புவனசந்திரன் (கனடா), சரவணபவான் (ஜேர்மனி), புவனேந்திரா, புவனசோதி (கொழும்பு) சிறிரங்கநாதன், சிவ கணேசநாதன் (கொழும்பு), ஞானேஸ்வரன் (கனடா) ஆகி யோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 26.05.2007 ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சிறிரங்கநாதன்
(மைத்துனர்)

துர்க்காபுரம், மகாதனை,
தெல்லிப்பழை. (60941)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதுமாணி பரீட்சைகள் திங்கள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மே26

யாழ்.பல்கலைக்கழகத்தில் முதுமாணி பரீட்சைகள் (அபிவிருத்தி, பிராந்திய திட்டமிடல், சனத்தொகை) நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளது.

இதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் யாழ். பல்கலைக்கழக பட்டப்படிப்புகள் பீடாதிபதி அலுவலகம் மேற்கொண்டுள்ளது.

மேற்படி முதுமாணி அபிவிருத்தி, முதுமாணி பிராந்திய திட்டமிடல், முதுமாணி சனத்தொகை ஆகிய பரீட்சைகளுக்கான அனுமதி அட்டைகள் பட்டப்படிப்புகள் பீடத்தினால் வழங்கப்பட்டு வருகின்றன. (203-95)

# நடமாடும் பதிவு சேவை

யாழ்ப்பாணம்,மே26

கரவெட்டி பிரதேச செயலகப் பிரிவினுள் இதுவரை பிறப்பு, இறப்பு, விவாகம், ஆகிய பதிவுகளை மேற்கொள்ளாதவர்களுக் கென நடமாடும் சேவை ஒன்றை நடத்தப் படவுள்ளது.

பதிவுகளை மேற்கொள்ள விரும்புபவர்கள் எதிர்வரும் 5ஆம் திகதிக்கு முன்னர் தமது பிரிவு கிராம சேவையாளருடன் தொடர்பு கொண்டு பெயர் விவரங்களைப் பதிவுசெய்யுமாறு கரவெட்டி பிரதேச செயலர் கேட்டுள்ளார். (202)

# குளங்கள் புனரமைப்பு

நல்லூர்,மே26

யாழ். ஆரியகுளம், கன்னாதிட்டிக்குளம் மற்றும் பொதுநூலகத்தின் முன்புறம் அமைந்துள்ள வடிகால் ஆகியவற்றின் புனரமைப்புப் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே இவற்றின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு கட்டப் பொருள்களுக்கு ஏற்பட்ட தட்டுப்பாடு காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்தன.

நொராட் நிறுவனத்தின் நிதியுதவியுடன் நடைபெறும் புனரமைப்புப் பணிகள் வெகு விரைவில் பூர்த்தியடையும் என யாழ். மாநகர சபை ஆணையாளர் மு.செ.சரணபவ தெரிவித்தார். (202-111)

# கொடிகாமத்திலிருந்து சுன்னாகத்திற்கான சிற்றூர்திப் போக்குவரத்துச் சேவை அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,மே26

தென்மராட்சி தனியார் சிற்றூர்திச் சேவைகள் சங்கத்தினர் கொடிகாமத்திலிருந்து சுன்னாகத்திற்கான 811 மார்க்க மினிபஸ் சேவையை அதிகரித்துள்ளனர்.

தினமும் கொடிகாமத்திலிருந்து காலை 7 மணி, 8.30 மணி, முற்பகல் 10 மணி, நண்பகல் 12 மணி ஆகிய நேரங்களில் புறப்பட்டு சாவகச்சேரி, கைதடி, செம்மணி, கல்வியங்காடு, கோப்பாய், மருதனார்மடம் ஊடாக சுன்னாகத்திற்கும் -

சுன்னாகத்திலிருந்து காலை 7.15மணி, 9மணி, நண்பகல் 12மணி ஆகிய நேரங்களில் இதே மார்க்கமாக கொடிகாமத்திற்கும் சேவை இடம்பெற்றுவருகின்றது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (203-207)

### தென்மராட்சியில்

# வாகனங்களில் அனுமதியின்றி மரக்குற்றிகளை ஏற்றிச் செல்வதற்கு நீதிமன்று தடை விதிப்பு

யாழ்ப்பாணம்,மே26

தென்மராட்சிப் பிரதேசத்தில் வீதி ஒழுங்கை மீறும் வகையில் வாகனங்களில் மரக்குற்றிகளை ஏற்றிச் செல்வது தடைசெய்யப்பட்டுள்ளது. இதனை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று சாவகச்சேரி நீதிமன்று அறிவுறுத்தியுள்ளது.

சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான உத்தரவை சாவகச்சேரி நீதிவான் கொடிகாமம் மற்றும் சாவகச்சேரி பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கு விடுத்துள்ளார்.

இதன் பிரகாரம் அண்மையில் சைக்கிள், இருசக்கர உழவு இயந்திரம்(லான்ட் மாஸ்டர்) என்பனவற்றில் மரக்குற்றிகள் ஏற்றிச் சென்ற 9 பேருக்கு எதிராக நீதிமன்றில் பொலீஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

தென்மராட்சியில் அண்மைக் காலமாக அனுமதிப்பதிரமின்றி மரக்குற்றிகளை வாகனங்களில் ஏற்றிச் செல்வது அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (202-207)

# கொழும்புக் குண்டு வெடிப்பு; புலிகளுக்குத் தொடர்பில்லை

## இளந்திரையன் தெரிவிப்பு

கொழும்பு,மே 26

கொழும்பு துறைமுகப் பகுதியில் நேற்று இடம்பெற்ற குண்டுத் தாக்குதலுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பில்லை என்று புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் தெரிவித்துள்ளார்.

''சிறிலங்கா அரசாங்கமும் அரச படைகளும் விடுதலைப் புலிகள்தான் இக்குண்டு வெடிப்பை நடத்தியுள்ளார்கள் எனத் தவறான பரப்புரைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். புலிகளின் முப்படைகளும் வளர்ச்சியடைந்த நிலையில் குறிப்பாக வான் படைகள் சிறிலங்கா படைத்துறையுடன் தொடர்புபட்ட இலக்குகள் மீது மிகவும் துல்லியமாக தாக்குதலை நடத்தும்போது இவ்வாறான சில்லறைத் தனமாகக் குண்டுத் தாக்குதல்களை நடத்தவேண்டிய தேவை விடுதலைப் புலிகளுக்கு இல்லை'' - என்று இளந்திரையன் கூறினார். (சி)

# உதவித் தபால் அதிபர் பரீட்சை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மே 26

உதவித் தபால் அதிபர்களைப் பதவி உயர்த்துவதற்காக நாடு முழுவதும் இன்று நடைபெற இருந்த போட்டிப் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது.

இப் பரீட்சை அடுத்த மாதம் 9ஆம் திகதி நடைபெறும் என்றும் -

இந்தப் பரீட்சை யாழ்ப்பாணத்தில் இரு நிலையங்களில் நடைபெறும் என்றும் - யாழ். தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-1-203)

# நீச்சல் தடாகத்தில் உயிரிழந்த தமிழ்ச் சிறுமி

யாழ்ப்பாணம், மே 26

சுவிஸ், சூரிச்சில் நீச்சல் தடாகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை பயிற்சியில் ஈடுபட்டிருந்த தமிழ்ச் சிறுமி ஒருவர் உயிரிழந்தார்.

சிறுப்பிட்டியைச் சேர்ந்த சிவநேசன் தம்பதிகளின் புதல்வியான வாசுகி சிவநேசன் (வயது 7) என்பவரே உயிரிழந்தவர் ஆவார். (அ-1)

# முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கான பரீட்சை விரைவில்

யாழ்ப்பாணம், மே 26

சிறுபணியாளர்களை முகாமைத்துவ உதவியாளர் தரம் !!! இற்கு தரம் உயர்த்துவதற்கான நேர்முகப்பரீட்சை விரைவில் நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாண பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் வே.பொ.பாலசிங்கம் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

இதன் முதற்கட்டமாக வடக்கில் பரீட்சையில் சித்தியடைந்த 30 அலுவலர்களின் விவரங்கள் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளன.

பரீட்சையில் சித்தியடைந்தும் ஒன்றரை வருடங்கள் கடந்த நிலையிலும் நேர்முகப் பரீட்சை இடம்பெறவில்லை என 'உதயன்' சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (202-95)

# தேர்தல் மறுசீரமைப்பை தீர்மானிப்பது நாடாளுமன்றமும் நாட்டு மக்களுமே!

## இடைக்கால அறிக்கைக்கு ரணில் கண்டனம்



கொழும்பு,மே26

தேர்தல் மறுசீரமைப்புத் தொடர்பாக நாடாளுமன்றமும், சர்வஜன வாக்கெடுப்பு மூலம் இந்நாட்டு மக்களுமே தீர்மானிக்க வேண்டும் என எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தேர்தல் மறுசீரமைப்பு தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் நடவடிக்கையைக் கண்டித்து வியாழனன்று நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் ஆறு பிரதான கட்சிகள் கூட்டாக செய்தியாளர் மாநாடொன்றை நடத்தின. ஐ.தே. கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இ.தொ.கா, மலையக மக்கள் முன்னணி, மேலக மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளின் தலைவர்கள், பிரதிநிதிகள் இச் செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

அப்போது எதிர்க்கட்சித் தலைவர் தொடர்ந்து கூறியதாவது:-

தேர்தல் மறுசீரமைப்புத் தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் இடைக்கால அறிக்கைக்கு சகல கட்சிகளின் ஆதரவும் இருப்பதாக நாடகமாடப்படுகிறது. இந்த அறிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதில் ஐ.தே.க, ஜே.வி.பி, இ.தொ.கா ஆகிய கட்சிகள் இணைந்து செயற்பட்டன. இக்கட்சிகள் இலகுவில் இணையக் கூடிய கட்சிகளல்ல. தேர்தல் மறுசீரமைப்புக்கே சகல கட்சிகளின் ஆதரவையும் பெற முடியாவிட்டால் இனப் பிரச்சினைக்கு எவ்வாறு சகல கட்சிகளினதும் ஆதரவைப் பெறுவது.

ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் விகிதாசாரத் தேர்தல் முறையையும்இணைத்து, தொகுதி முறையை ஏற்படுத்துவதென்றால் முதலில் குடிசன மதிப்பீடு நடத்தவேண்டும். அதன் பின்னரே தொகுதிகளைப் பிரிக்க வேண்டும் - என்றார்.

**இரா. சம்பந்தன் கருத்து**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன் பேசும்போது கூறியதாவது:-

ஆட்சிமுறையில் மாற்றம் வேண்டும். நாட்டின் இறைமை பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். இதன் மூலம் தம்மைத் தாமே ஆளும் வாய்ப்பு தமிழ் மக்களுக்கு ஏற்படும் வகையில் தேர்தல் முறையில் மாற்றம் வேண்டும். பெரும்பான்மை மக்களுக்கு பாதகம் ஏற்படாத வகையிலும், அதேபோன்று சிறுபான்மை மக்களுக்கு குறிப்பாக முஸ்லிம்கள் மலையக மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையிலும் இந்த மாற்றங்கள் இருக்க வேண்டும். தேர்தல் மறுசீரமைப்புத் தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் இடைக்கால அறிக்கை ஸ்திரத்தன்மையுள்ள அரசை ஏற்படுத்தும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. எண்ணிக்கைகயை கவனிக்காமல் இனப் பிரதிநிதித்துவத்திற்கு முக்கியத்துவம் வழங்கப்படவேண்டும்- என்றார்.

**ஆறுமுகன் தொண்டமான்**

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் பேசும்போது கூறியதாவது:-

தேர்தல் மறுசீரமைப்பு தொடர்பான இடைக்கால அறிக்கையில் சிறுபான்மை பிரதிநிதித்துவத்தைக் குறைக்கும் வகையில் அமைந்துள்ளது. இப்போது மலையக மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 16 எம்.பிக்கள் இருக்கின்றனர். இடைக்கால அறிக்கையின்படி இருவர் மட்டுமே தெரிவாக முடியும். எனவே, இதை நாங்கள் எதிர்க்கின்றோம் - என்றார்.

**மனோகணேசன்**

மேலக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன் எம்.பி. பேசும்போது கூறியதாவது:-

அவசர அவசர அவசரமாக இடைக்கால அறிக்கையை முன்வைத்து தமது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளும் அரசின் சதி முயற்சி யாகவே நாம் இதனைப் பார்க்கின்றோம். இதன்மூலம் சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவத்தையும், சிறிய கட்சிகளையும் ஒழிக்கும் நோக்கமே இந்த நடவடிக்கை. இந்த இடைக்கால அறிக்கைக்கு ஜே.வி.பியும் தனது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது - என்றார். (சி)

# நெத் எவ்.எம். ஒலிபரப்பு நாடு முழுவதும் விஸ்தரிப்பு

கொழும்பு,மே25

தென்னிலங்கை மக்களின் அபிமானத்தைப் பெற்ற சிங்கள வானொலிச் சேவையான 'நெத் எவ்.எம்.' வானொலி தனது ஒலிபரப்பை நாடு முழுவதும் விஸ்தரிக்க நடவடிக்கை எடுத்துள்ளது. இதன் முதற்கட்டமாக ரஜரட்ட சேவை அனுராதபுரத்தில் 105.4 அலைவரிசையினூடாக ஒலிபரப்பப்படுகிறது என அந்த நிறுவனம் அறிவித்திருக்கிறது.

மேலும் 100.4 அலைவரிசையினூடாக மலையகத்திற்கும், 105.9 அலைவரிசையினூடாக ஊவா மாகாணத்திற்கும் தனது வானொலிச் சேவையை விஸ்தரிக்க அது துரித நடவடிக்கை எடுத்து வருகிறது.

- இவ்வாறு நெத் எவ்.எம். வானொலிச் சேவையின் தலைவர் நிஹால் செனவிரத்ன தெரிவித்தார்.

கடந்த செவ்வாயன்று இந்த வானொலி நிலையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். இந்நிகழ்வில் பிரதான நிறைவேற்று அதிகாரியான அசங்க ஜயசூரிய, உதவிப் பொது முகாமையாளரான நுவன் லியனகே ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:-

'நெத் எவ்.எம்.' ஒலிபரப்புச் சேவை தெரிவு செய்யும் அதி நவீன தொழில்நுட்பத்தின் கீழ் வெவ்வேறு பகுதி மக்களை மகிழ்ச்சிப்படுத்தவென அந்தந்தப் பகுதிகளுக்கான நிகழ்ச்சிகளை தெரிவுசெய்து ஒலிபரப்புச் செய்யவுள்ளோம்.

இவ்வானொலிச் சேவையில் புதிய சமய சம்பந்தமான நிகழ்ச்சி வாரத்தின் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் காலை 8 மணி தொடக்கம் 9 மணிவரை இடம்பெறும்.

திங்கட்கிழமைகளிலும் செவ்வாய்க் கிழமைகளிலும் இரவு 7 மணி தொடக்கம் 9 மணிவரை அரசியல் சம்பந்தமான நிகழ்ச்சிகளும் இடம்பெறும். மேலும் ஜூன் 4ஆம் திகதி தொடக்கம் வார நாட்களில் காலை 7 மணி தொடக்கம் 7.30 மணிவரையில் 'நெத் எவ்.எம்.' பணிப்பாளர்கள், ஊழியர்களை எமது இலங்கை நாட்டு பிரஜைகள் முன் கொண்டு வருவோம் - என்றார் அவர். (சி)

# அரசமைப்பை பின்கதவால் மாற்றுகின்ற முயற்சியோ...?

## தேர்தல் மறுசீரமைப்பு அறிக்கையில் ஹக்கீம் சந்தேகம்



அவசர அவசரமாக தேர்தல் மறுசீரமைப்புத் தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் இடைக்கால அறிக்கையை சமர்ப்பிக்க முனைவது அரசு பின்கதவால் அரசமைப்பை மாற்றும் நடவடிக்கையை எடுக்கின்றதோ என்ற சந்தே கத்தை ஏற்படுத்தியிருப்பதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

தேர்தல் மறுசீரமைப்பு இடைக்கால அறிக்கை தொடர்பாக நேற்றுமுன்தினம் நாடாளுமன்றக் கட்டடத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் ஹக்கீம் மேலும் தெரிவித்ததாவது:-

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக நியமிக்கப்பட்ட சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் சகல கட்சிகளின் இணக்கப்பாட்டை பெற்ற தீர்வு ஆலோசனைகள் நிராகரிக்கப்பட்டன. இப்படி இருக்கும்போது பெரும்பான்மை எதிர்க்கட்சிகளின எதிர்ப்புக்கு மத்தியில் தேர்தல் மறுசீரமைப்புத் தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் இடைக்கால அறிக்கையை எவ்வாறு ஏற்றுக் கொள்வது? சிறுபான்மை கட்சிகள் மற்றும் சிறு கட்சிகளின் பிரதிநிதித்துவத்தை இல்லாதொழிக்கும் நடவடிக்கையாகவே நாம் இதைக் கருதுகின்றோம் - என்றார்.

**இராதாகிருஷ்ணன்**

மலையக மக்கள் முனன்ணியின் எம்.பியும் பிரதியமைச்சருமான ஆர். இராதாகிருஷ்ணன் பேசும்போது கூறியதாவது:-

தேர்தல் மறுசீரமைப்புத் தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் இடைக்கால அறிக்கை சிறுபான்மையினரின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தைக் குறைக்கும் வகையில் உள்ளது.

இப்போது மலையக மக்களின் பிரதிநிதிகளாக 16 பேர் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்றனர். இதைக் குறைக்கும் நடவடிக்கையை நாம் எதிர்க்கின்றோம் - என்றார்.(சி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அச்சுவேலி, பத்தமேனி



# அருள்மிகு தீர்த்தாங்குளப் பிள்ளையார் கோயில்

*சகஸ்ர சங்காபிஷேகம் (1008)*

## மணவாளக் கோலத் திருவிழா விஞ்ஞாபனம் - 2007

காலம்:- நாளை (27.05.2007) ஞாயிற்றுக்கிழமை
காலை 8 மணிக்கு 1008 சங்காபிஷேகம் நடைபெற்று
தொடர்ந்து விஷேட பூசையும்
மதியம் மகேஸ்வர பூசையும் நடைபெறும்.
மாலை 3 மணிக்கு திருவூஞ்சல் நடைபெற்று
விநாயகப் பெருமான் திருவீதி உலா
அன்னப் பட்சியான ஊர்தியில் வலம் வருவார்.

*உபயம்:- மணவாளக்கோல உபயகாரர் சார்பில்*
*தீர்த்தோற்சவ உபயகாரர்களில் ஒருவர்:*
**செ.சந்திரமூர்த்தி**
*சந்திரா கொமினிக்கேசன், யாழ்.வீதி, உடுப்பிட்டி.*
*தொ.பே. 021 226 3524*

(60907)



## Dizney Digital Technology

P/L கணனி மற்றும் கணனி
உதிரிப்பாகங்கள் விற்பனைக்கு

| | |
|---|---|
| Mother board (LGA Asus, AsRock, AMD) | Combo Drive (Asus, Sony) |
| Hard Disk (IDE, SATA) | Keyboard, Mouse |
| Processor | Flash drive |
| Ram (SDR,DDR, DDRII) | Speaker |
| DVD writer (Asus, Samsung) | (கையிருப்பு உள்ளவரை மட்டுமே) |

**Ramalingam Road,**
**Thirunelvely.**
**T.P.: 021 222 5894, 077 6179105**
(பூங்கனிச்சோலை முன்பாக).

(60949)



## பல்லவி அமுதம்
## நூல், இறுவட்டு வெளியீட்டு விழா

இயற்றியவர்
*கலாபூஷணம்*
**க.ப.சின்னராசா**



ஸ்வர அமைப்பு
*இசைமாணி*
**தவநாதன் றொபேட்**

*காலம்:-* நாளை (27.05.2007) ஞாயிற்றுக்கிழமை
*இடம்:-* கலாசார மண்டபம், இளந்தொண்டர் சபை,
இணுவில்.
*நேரம்:-* காலை 9 மணி

*''அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்''*

(60948) **விழாக்குழு.**


# மரண அறிவித்தல்கள்



## இளையதம்பி இராசையா

*(கட்டட ஒப்பந்தகாரர்)*

அரியாலை, நொத்தாரிஸ் வீதியைப் பிறப்பிடமாகவும் வடமராட்சி அல்வாய் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி இராசையா 24.05.2007 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - பூரணம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற யோதிமலரின் அன்புக் கணவரும் ரேவதி (லண்டன்), காலஞ்சென்றவர்களான ஐங்கரன், இந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் தமிழ்அழகனின் மாமனும் ஜோதியின் (லண்டன்) அன்புப் பேரனும் இராசம்மா, மாணிக்கம், நடராசா, சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் சின்னையா, கந்தசாமி, நல்லம்மா, தங்கச்சியம்மா, மனோன்மணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*47/1, நொத்தாரிஸ் வீதி,*
*அரியாலை,*
*யாழ்ப்பாணம்.* (60955)

தகவல்:
**தி.சின்னையா**
[ஓய்வுபெற்ற ஊழியர், விற்பனைத் திணைக்களம்].

## பிலோமினா மரியநாயகம் (ருக்மணி)

( ஓய்வுபெற்ற ஆசிரியை, புனித சாள்ஸ் மகாவித்தியாலயம் )



யாழ்ப்பாணம், அச்சக வீதியைப் பிறப்பிடமாகவும் ஹொலன்டை வசிப்பிடமாகவும் கொண்ட பிலோமினா மரியநாயகம் 24.05.2007 வியாழக்கிழமை ஹொலன்டில் காலமானார்.

அன்னார் மரியநாயகத்தின் (ஹொலன்ட்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சவரிமுத்து - மரியம்மா தம்பதியரின் அருமை மகளும் காலஞ்சென்றவர்களான செலஸ் ரீன் பிள்ளை - அந்தோனியாப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் அல்றின் ஜோயின் (ஹொலன்ட்) பாசமிகு தாயும் மதிவதனி மரியாவின் (ஹொலன்ட்) அன்பு மாமியும் நீற்றா (ஹொலன்ட்), றோச் கமலாகரன் (ஹொலன்ட்), மரியதாஸ் மனோகரன் (ஓய்வு பெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்), தேவதாசன் மகேந்திரன் (ஹொலன்ட்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜொய்லீன் மரிலீனாவின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் 30.05.2007 புதன்கிழமை ஹொலன்டில் நடைபெறும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*32/16, அச்சக வீதி,*
*யாழ்ப்பாணம்.* (60950)

தகவல்:-
**மரியதாஸ்** [மனோகரன்-சகோதரன்].

## கைலாசபிள்ளை பொன்னுத்துரை

*(பொறியியலாளர்)*



யாழ்.திருநெல்வேலி, பத்திரகாளி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்தவருமாகிய கைலாசபிள்ளை பொன்னுத்துரை (பொறியியலாளர்) 24.05.2007 வியாழக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் கனகாம்பிகையின் (ஆசிரியை) அன்புக் கணவரும் காலஞ்சென்ற கைலாசபிள்ளை - மாரிமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னத்துரை - நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம், கனகரத்தினம், சரஸ்வதி மற்றும் பராசக்தி, பொற்கொடி (கனடா), இராசபாக்கியம், கணேசலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், கந்தசாமி, வேலாயுதம் மற்றும் திருநாவுக்கரசு, பத்மலிங்கம், நவரட்ணம், தனராஜா, தங்கரத்தினம், கனகமணி, சாந்தினி,யோகாம்பிகை, குணராணி, லலிதா, கலாறஞ்சினி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28.05.2007 திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வ.திருநாவுக்கரசு,**
*காளிகோயிலடி,*
*சங்கானை.* (60957)

**சி.தனராஜா**
*64/8, 2ஆம் ஒழுங்கை,*
*பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.*

## திருத்தி வாசிக்கவும்

*நேற்றைய உதயனில் ஆறாம் பக்கத்தில் வெளியான பண்டாரம் புவிராசா என்பவரின் துயர்பகிர்வு விளம்பரத்தில் திருமதி சுமதி ஸ்ரீஸ்கந்தராசா என்ற பெயரை திருமதி சுமதி ஸ்ரீசுந்தர்ராஜா என்று திருத்தி வாசிக்கவும். தவறுக்கு வருந்துகின்றோம்.*


## காணி விற்பனைக்கு

மல்லாகத்தில், கே.கே.எஸ். வீதிக்கு அண்மையில் [பழைய சோடாக் கொம்பனி ஒழுங்கை] கிணற்றுடன் கூடிய $2\frac{1}{2}$ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: **0777242198**
S.ஆனந்தசபாபதி, அம்பனை வீதி, அளவெட்டி.
[அழகொல்லைப் பிள்ளையார் கோயிலடி] (60954)

## விற்பனைக்கு

MOTOROLA *தொலைபேசி இணைப்பு* BOOTH-1
VIDEO MIXER (DIGITAL - 2000 ENGLISH)
LG *பிறிஜ்* (Single door)
HERO HONDA - PASSION PLUS (MAROON)
NPME *தொடரிலக்கமுடையது*
WEGASONIC (VIDEO CD, MP3 & TAPE, RADIO)
*தொடர்பு: 077 9233195, 077 9590591*

(60947)


## அவசர சந்திப்பு

வெளிமாவட்ட
மத்திய அரச ஊழியர்
28.05.2007 காலை 8.30 மணிக்கு
கச்சேரிக்கு சமீபமாக சந்திக்கவும்.

(60936) **சக ஊழியர்.**

## தவறிவிட்டது

*3ஆம் கட்டை, ஆனைக்கோட்டை என்னும் முகவரியைச் சேர்ந்த வசந்தகுமார் சுரேஸ் என்பவரது தேசிய அ.அட்டை (851044353 V) 24.05.2007 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.* (60952)


## நாய்க்குட்டி விற்பனைக்கு

*மூன்று மாதம் நிரம்பிய தூய இன டோமன் பிஞ்சர், அல்சேஸிஸ் குறோஸ் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.*
*முகவரி:* No.6, நந்தாவில் ஒழுங்கை,
(இராமகிருஷ்ணமிஷன் பாடசாலை பின் வீதி)
கொக்குவில் கிழக்கு .
*பார்வையிடும் நேரம்: மு.ப. 11 மணி - 12 மணிவரை*
*மாலை 4 மணி - 6 மணி வரை*



புதிய கிளை நிறுவனத்துடன் நாம்...!
**COMPUTER EXPRESS**
ஒருவாரகால முழுநேர
கற்கைநெறிகள்

Jaffna Head office: No 15, Stanley Rd Lane (off Stanly Rd.), 021-222 8250, 0777 222422
Branch office: No 167, Kasthuriyar Rd. (Near Uthayan Publication) Jaffna.

### Diploma in Hardware Engineering
❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault Finding ❖ Repairing ❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking Etc.
Course Fee 2000/=

### Diploma in Computerized Accounting
ACCPAC + Quick Books Premier + MYOB ஆகிய முன்னணி Accounting Software களினூடாக கற்பிக்கப்படும்.
Course Fee 3500/=

### Diploma in Video Mixing
❖ Introduction to Computer ❖ Operating System (Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio ❖ VCD Cutter
Course Fee 3000/=

### Diploma in Graphic Designing
❖ Adobe Photoshop ❖ Corel Draw ❖ Cool3D Studio ❖ Macromedia Flash MX

ஒரே நாளில் ஆரம்பம்:- 28/05/2007 - 9.00AM



## கணனிக் கருத்தரங்கு
## மின் வணிகம் (E-commerce)

*செயன்முறையுடன் கூடிய மேற்படி கருத்தரங்கில்*
1. கடனட்டையும் அதன் பிரயோகமும்
2. வெப்தளங்களும் உருவாக்கலும்
3. வெப் தளத்தினூடாக வருமானம்
4. இணையத்தில் வாங்குதல் - விற்றல்
5. இணைய வங்கிச் சேவை
6. இணையம் மூலம் பங்கு வர்த்தகம்

உள்ளிட்ட பல விடயங்கள்....

*காலம் : நாளை (27.05.2007) ஞாயிறு*
அமர்வு I நேரம் காலை 08.30 - 10.30 வரை
அமர்வு II. நேரம் மாலை 02.30 - 04.30 வரை
*கட்டணம் ரூபா 200 மட்டும்.*

**Speed IT net**
72/28, பணிக்கர் லேன், திருநெல்வேலி.
(உயர் தொழில்நுட்ப நிறுவகம் அருகில்)
Tel: 4591871 web:www.speeditnet.com


## இலங்கை மின்சார சபை - யாழ்.பிரதேச அலுவலகம்
## மின்தடை பற்றிய அறிவித்தல்

*கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் அவசர திருத்த வேலைகளைச் செய்யும் பொருட்டு இன்று (26.05.2007) சனிக்கிழமை காலை 8 மணிமுதல் மாலை 4 மணிவரை மின்சார விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்பதை மின்பாவனையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு முன்பும் மின்சாரம் வழங்கப்படலாம் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.*

*கோண்டாவில், உரும்பிராய், திருநெல்வேலி மருத்துவபீட பிரதேசம், யாழ்.மாநகர சபைப் பகுதி.*

*இதனால் மின்பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகின்றோம்.*

*பிரதேச மின் பொறியியலாளர்,*
*இலங்கை மின்சார சபை,*
*யாழ்.பிரதேச அலுவலகம்,*
*சுன்னாகம்.*
*2007.05.24.*

*''சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும்''*
(சி/52482) *இலங்கை மின்சார சபை.*

## யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் - வ.து

### கழிவுப் பொருள்களுக்கான கூறுவிலை கோரல்

| பொருள்கள் | கூறுவிலை |
|---|---|
| கழிவு அரிசி | 400 கிலோகிராம் |
| கழிவு மா | 1000 கிலோகிராம் |
| கழிவு சீனி | 100 கிலோகிராம் |
| கழிவு மஞ்சள் பருப்பு | 50 கிலோகிராம் |
| கழிவு நெத்தலி | 50 கிலோகிராம் |

*மேற்படி கழிவுப்பொருள்களுக்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றன. கூறுவிலை விண்ணப்பங்கள் 2007.06.01ஆம் திகதிக்கு முன்னதாக,*

*பொதுமுகாமையாளர்,*
***யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் வ.து,***
***127, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.***

*என்னும் முகவரிக்கு கழிவுப்பொருள்களுக்கான கூறுவிலை விண்ணப்பம் எனக் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் எழுதப்பட்டு நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்பிவைக்கப்படல்வேண்டும்.*

*பொதுமுகாமையாளர்,*
*யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் வ.து.*
*2007.05.25*
(சி/52484)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# சர்வதேச அரசியலைக் கையாள சாணக்கியமற்ற இலங்கை

தன்னை இறைமையுள்ள, சட்டபூர்வமான அரசாகப் பிரகடனப்படுத்திக் கொள்ளும் கொழும்பு அரசு, இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் சர்வதேச மனிதாபிமான ஏற்பாடுகளை மதிக்காமல், பௌத்த - சிங்களப் பேரினவாத மேலாண்மைப் போக்கோடு செயற்படுவது, சர்வதேச ரீதியில் அதற்கு எதிரான கருத்து நிலைப்பாட்டை உருவாக்கி வருகின்றது என இப்பத்தியில் பல தடவைகள் சுட்டிக்காட்டி வந்திருக்கிறோம்.

அது பற்றிய தகவல்கள் தொடர்ந்து வந்தவண்ணம் இருக்கின்றன.

தினசரி ஆள்கடத்தல்கள், கப்பம் அறவிடல், படுகொலைகள், மோசமான மனித உரிமை மீறல்கள் என்று பேரவலத்தைச் சந்தித்து வரும் ஈழத் தமிழர்களுக்கு கொழும்பு அரசின் காவல்துறை, சட்டம் மற்றும் ஒழுங்கு முறைமைகளின் கீழ் நீதியோ, அமைதியான - கௌரவமான வாழ்வோ, உரிய சட்ட நிவாரணமோ கிடைக்கவே மாட்டாது என்று கருதும் சர்வதேச மனித உரிமை அமைப்புகள், தமிழ் மக்களின் வாழ்வியல் உரிமைகளைப் பாதுகாக்கும் ஒரே நடவடிக்கையாக இவ்விடயத்தில் ஐ.நா. நேரடியாகத் தலையிட வேண்டும் என்று வற்புறுத்தியிருக்கின்றன.

அமெரிக்காவைத் தளமாகக் கொண்டு இயங்கும் மனித உரிமைகள் காப்பகம் (Human Rights Watch), லண்டனைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் சர்வதேச மன்னிப்புச் சபை ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு போன்றவையே இலங்கை விவகாரத்தைக் கண்காணித்து, நிலைமையை நேர்சீர் படுத்துவதற்காக ஐ. நா. அமைப்புகள் நேரடியாகத் தலையிட வேண்டும் என்று வற்புறுத்தத் தொடங்கியிருக்கின்றன.

தமது தாயகமான வடக்கு, கிழக்கிலும் மற்றும் தென்னிலங்கையிலும் மோசமான மனித உரிமை மீறல் அவலங்களை எதிர்கொண்டுவரும் தமிழர்களை ஐ. நா. தலையீடு மூலம் மட்டுமே தற்காலிகமாகவேனும் பாதுகாக்க முடியும் என இந்த அமைப்புகள் தெரிவித்திருக்கின்றன.

ஐ. நா. தலையீட்டின் அவசியத்தை வலியுறுத்தும் நடவடிக்கையாக அவை இவ்விவகாரம் குறித்து தமக்குள் கலந்துரையாடல்களை நடத்தி வருவதோடு, ஜப்பான், அமெரிக்கா போன்ற நாடுகளின் அதிகாரிகளுடனும் ஆலோசனைகளை நடத்தி வருகின்றன என்றும் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

இதேசமயம் இலங்கை உட்பட பல்வேறு நாடுகளில் பாதிப்புற்ற மக்களுக்காகக் குரல் எழுப்பிவரும் மனித உரிமை ஆர்வலரான பேர்னாட் குச்னர், புதிய பிரான்ஸ் அரசின் வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்படவிருக்கின்றமையும் கொழும்பு அரசுக்கு சர்வதேச மட்டத்தில் பலத்த பின்னடைவு என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

திருகோணமலை மாவட்டம், மூதூரில் பிரான்ஸ் தொண்டர் நிறுவனம் ஒன்றின் உள்ளூர் பணியாளர்கள் 17 பேர் படுகொலையுண்டமை உட்பட பல்வேறு மோசமான படுகொலைச் சம்பவங்கள் பற்றிய விடயங்களைக் கண்காணித்து, ஆராய்வதற்கு சுயாதீனமான சர்வதேசப் பிரமுகர்களைக் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டது. இக்குழுவுக்கான ஒரு பிரதிநிதியாக பேர்னாட் குச்னரை ஐரோப்பிய ஒன்றியம் நியமித்தபோது, இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் நெருங்கிய ஆலோசகரும், ஜெனிவாவில் சர்வதேச விவகாரங்களைக் கையாளும் இலங்கையின் விசேட தூதுவராக நியமிக்கப்பட்டவருமான தயான் ஜெயதிலக, குச்னர் வரவை காரசாரமாகக் கண்டித்தார்.

''ஐரோப்பிய ஒன்றியம் தனது பிரதிநிதியாக குச்னரை நியமிப்பது மோசமான விடயம். இலங்கையைத் துண்டாடுவதற்கான முதல் நடவடிக்கை இது. பிரான்ஸ் மருத்துவத் தொண்டர் அமைப்பின் ஸ்தாபகரான குச்னரின் நியமனம் இலங்கையில் சர்வதேசத் தலையீட்டுக்கான ஆரம்பப் பொறி. மனிதாபிமான விடயத்தின் பேரிலான இந்தத் தலையீடு, அவர் (குச்னர்) கொசோவோ விவகாரத்தில் நுழைந்து அதை இன ரீதியில் வகுத்தமை போன்ற நிலைமைக்கு வழிசெய்யும்.'' - என்றவாறெல்லாம் தயான் ஜெயதிலக காட்டமாக விமர்சித்திருந்தார்.

தயான் ஜெயதிலக இவ்வாறு பகிரங்கமாக வெளிப்படுத்திய கருத்துகள், இலங்கை ஜனாதிபதியின் உள்ளக்கிடக்கையின் பிரதிபலிப்புத்தான் என சர்வதேசத்திலும் கருதப்பட்டது.

அண்மையில் தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலாளர் ரிச்சர்ட் பௌச்சர் இலங்கைக்கு விஜயம் செய்து, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்த சமயம், ஜனாதிபதி மஹிந்தர் தமது கருத்துப் பீரங்கித் தாக்குதலுக்கு தம்முடன் பக்கத்தில் வைத்துக் கொண்ட ஆலோசகர் இந்த தயான் ஜயதிலகதான்.

ரிச்சர்ட் பௌச்சர், இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் குறித்து அதிகம் கதைக்க முன்னர், உலக நாடுகளில் அமெரிக்காவின் மனித உரிமை மீறல்கள் குறித்து அழுத்தமாகக் குறிப்பிட்டு, பௌச்சரின் வாயை அடக்கிவைத்தார் தயான் ஜெயதிலக என்று பின்னர் ஜனாதிபதி மஹிந்தரே பல இடங்களில் பீற்றிக் கொண்டார் என்றும் கூறப்படுகின்றது.

இவ்வாறு, ஜனாதிபதி மஹிந்தருக்கு நெருக்கமானவரால் கடுமையாக விமர்சிக்கப்பட்டு, அதன் மூலம் மஹிந்தரின் அரசுக்கு முற்றிலும் மாறானவர் என்று கருதப்படும் பேர்னாட் குச்னர், ஐரோப்பிய ஒன்றியத்தில் மிக செல்வாக்காக இருக்கும் பிரான்ஸ் நாட்டில் மிக முக்கியத்துவம் மிக்க வெளிவிவகார அமைச்சுப் பொறுப்பை ஏற்கின்றார்.

இனப்பிரச்சினை விவகாரத்தில் கொழும்புக்கு எதிராக சர்வதேசம் திரும்பி வரும் நிலையில், குச்னரின் நியமனம், இலங்கைக்கு மற்றோர் அடி.

சர்வதேச விடயங்களைக் கையாளும் அரசியல் சாணக்கியத்தில் போதிய பரிச்சயமும் நிபுணத்துவமும் கொண்டவர்களின் வழிகாட்டலின்றி, உள்ளூர் அரசியலைப் பேரினவாதப் போக்கில் அணுகும் அதே பொறுப்பற்ற முறைமையை சர்வதேச அரசியலிலும் பிரயோகிப்பதால் சர்வதேச எதிர்ப்பை வாங்கிக் கட்டி வருகின்றது மஹிந்தர் அரசு.

இப்போக்கு, இலங்கையில் நொந்து போயிருக்கும் தமிழர்களுக்கு ஆதரவான சர்வதேச அணுகுமுறையாக மாறிவருவது தமிழருக்குக் கிடைத்த வரப்பிரசாதம் எனலாம்.

# இராணுவ விமர்சகர் அத்தாஸின் பாதுகாப்பு வாபஸ் பெறப்பட்டது

கொழும்பு, மே 26

'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையின் சிரேஷ்ட பாதுகாப்புத்துறை விமர்சகர் இக்பால் அத்தாஸிற்கு வழங்கப்பட்டு வந்த பாதுகாப்பு வாபஸ் பெறப்பட்டுள்ளது.

ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர இத்தகவலை நாடாளுமன்றில் தெரிவித்தார்.

இக்பால் அத்தாஸ் தமது வாராந்த பாதுகாப்புத்துறை தொடர்பான விமர்சனக்கட்டுரையில் தமிழீழ விடுதலைப் புலிகளை எதிர்ப்பதற்காக அரசாங்கம் 'மிக் - 29' ரக விமானங்களைக் கொள்முதல் செய்யவிருப்பது குறித்து விமர்சித்துள்ளார். அதனால் அரசாங்கம் அவருக்கு அளிக்கப்பட்டுவந்த பாதுகாப்பை வாபஸ் பெற்றுக்கொண்டுவிட்டது -

'மிக் - 29' ரக விமானங்களைக் கொள்வனவு செய்வது மாட்டு வண்டியை மோதுவதற்கு மேர்சிடஸ் பென்ஸ் வாங்குவது போலாகும் என்று விமர்சித்திருந்தார்.

இக்பால் அத்தாஸ் உண்மையை எழுதியுள்ளார். அது அரசாங்கத்துக்குப் பிடிக்கவில்லை. அதனால்தான் அவருக்கு அளிக்கப்பட்டுவந்த பாதுகாப்பு வாபஸ் பெறப்பட்டுள்ளது - என்று ஜயசேகர மேலும் கூறினார். (அ-ப)

# குடாக்கடலில் மீன் பிடிக்க நேற்று அனுமதி

குருநகர், மே 26

யாழ். குடாக்கடலில் தொழில் செய்வதற்கு மீனவர்களைப் படையினர் நேற்று அனுமதித்தனர். கடந்த வியாழக்கிழமை நெடுந்தீவில் நடைபெற்ற மோதலினால் அன்று மட்டும் மீனவர்கள் கடலுக்குச் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

இதே வேளை-

வடமராட்சிக் கடற்பரப்பில் நேற்று மீன்பிடிக்க அனுமதி வழங்கப்படவில்லை. (1-51-155)

# அத்தியாவசியப் பொருள்களுடன் 'இந்துருவலி' காங்கேசனுக்கு

யாழ்ப்பாணம், மே 26

அரிசி மற்றும் அத்தியாவசியப் பொருள்களுடன் 'இந்துருவலி' கப்பல் நேற்று காங்கேசன் துறை வந்து சேர்ந்தது.

யாழ். செயலகத்துக்கு ஆயிரத்து 500 மெற்றிக் தொன் அரிசி, யாழ். பல்லைக்கழகத்துக்கு இரண்டு மின்பிறப்பாக்கிகள் மற்றும் காகிதாதிகள், யாழ். ஆஸ்பத்திரிக்கு மருந்துப் பொருள்கள் ஆகியன இக்கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ளன.

பொருள்களை இறக்கும்பணி நேற்று ஆரம்பமானது. (அ-1)

# ஆயுதக் கொள்வனவு குறித்த விவரங்களை வெளியிட முடியாது

## நாடாளுமன்றத்தில் பிரதமர் தெரிவிப்பு

கொழும்பு, மே 26

அரசாங்கத்தால் கொள்முதல் செய்யப்படும் ஆயுத விவரங்கள் எதுவும் பாதுகாப்பு காரணங்களை முன்னிட்டு நாடாளுமன்றத்தில் வெளியிடப்பட மாட்டாது. பிரதமமந்திரி ரட்ணசிறி விக்கிரமநாயக்க நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் இவ்வாறு தெரிவித்தார்.

''மிக் - 29'' விமானக் கொள்வன தொடர்பாக நாடாளுமன்றில் நடைபெற்ற ஒத்திவைப்பு வேளை விவாதத்தை முடித்து வைத்துப் பேசிய பிரதமரர் மேலும் கூறியதாவது:

தமிழீழ விடுதலைப் புலிகளை எதிர்த்துப் போராடுவதற்காக ஆயுதங்கள் இராணுவ உயர் அதிகாரிகளின் ஆலோசனையின் பேரில் கொள்முதல் செய்யப்படுகின்றன. அரசியல்வாதிகளின் ஆலோசனைகளின் மீது அல்ல. இராணுவ அதிகாரிகளின் ஆலோசனைப்படி அவர்களுக்குத் தேவையான ஆயுதங்களை வழங்குவது அரசின் பொறுப்பு.

விமானப்படை அதிகாரிகள் சில இராணுவ உபகரணங்களை கொள்முதல் செய்வதற்கு ஆலோசனை வழங்கியுள்ளார்கள். ஆனால், பாதுகாப்புக் காரணங்களைக் கருத்திற்கொண்டு அந்த விவரங்களை வெளியிடமுடியாது. பொது பணத்தைப் பயன்படுத்துவது தொடர்பாக தீர்மானிக்கும் உயர் மட்ட அமைப்பு நாடாளுமன்றமே இந்த விவரங்களை வெளியிடமுடியாது.

பயங்கரவாதத்தை மிக விரைவாக அழித்துவிட வேண்டும் என்பதே அரசின் நோக்கம். அதற்கு வலுவான இராணுவம் தேவை. சமாதானக் காலத்திலும் இது அவசியம் - என்று கூறினார். (அ-ப)

### படைத்தரப்புக்களைத் தவிர

# கருணா குழுவினரும் கூட ஆயுதம் வைத்திருக்கமுடியாது

## அமைச்சர் போகொல்லாகம சொல்கிறார்

கொழும்பு, மே 26

அரசாங்க பாதுகாப்புப் படையினர் மற்றும் பொலிஸாரைத் தவிர வேறு எவரும் - கருணா குழுவினரும் கூட - ஆயுதம் வைத்திருக்க முடியாது.

வெளி நாட்டு அமைச்சர் ரோகித போகொல்லாகம இவ்வாறு தெரிவித்தார்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற மக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பாக இராஜதந்திர சமூகப் பிரமுகர்களுடன் தாம் நடத்திய பேச்சுவார்த்தைகள் தொடர்பாக, ஊடகங்களுக்கு விளக்கமளித்தபோதே அமைச்சர் மேற்கண்டவாறு சொன்னார்.

ஆயுதக் குழுக்கள் எதுவும் ஆயுதங்களுடன் திரிவதை நாங்கள் விரும்பவில்லை. ஆயுதப் படைகளும் பொலிஸாரும் மட்டுமே ஆயுதம் வைத்திருக்க முடியும் - என்று அமைச்சர் கூறினார்.

இதற்கிடையே கருணாகுழுவின் அரசியல் பிரிவு (தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள்) விடுத்துள்ள அறிக்கையொன்றில் தமது உறுப்பினர்கள் எவரும் சட்டவிரோத செயல்களில் ஈடுபட்டுவருகிறார்களா என்பதைக் கண்டுபிடிக்க அப்படியானவர்களை அடையாளம் காட்டும்படி மக்களைக் கோரியிருக்கிறார்கள்.

இதே வேளை-

விசேட அதிரடிப் படையின் கிழக்குப் பிராந்தியளத் தளபதியான பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிமால் லியுக்கி, தமது கட்டுப்பாட்டில் உள்ள மட்டக்களப்புப் பிரதேசத்தில், ஆயுதங்களைக் கொண்டு திரியும் எவராயினும் அவர்கள் மீது சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் - என்று சொன்னார்.

ஆயுதங்களுடன் திரிந்த பலரை அதிரடிப்படையினர் கைது செய்திருந்தனர். விசாரணைகளின் பின்னர் அவர்கள் ருணா குழுவைச் சேர்ந்தவர்கள் என்பது தெரியவந்தது என்றும் அவர் மேலும் கூறினார். (அ-ப)

# பௌத்த சங்க பிரதிநிதிகளை சந்திக்க பிரி. தூதர் மறுப்பு

கொழும்பு, மே 26

பௌத்த சங்கங்களின் சம்மேளனப் பிரதிநிதிகளை சந்திக்க கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் தூதுவர் மறுத்துள்ளார்.

இது தொடர்பாக மேற்படி பௌத்த சம்மேளனம் விடுத்துள்ள அறிக்கையில் -

பிரிட்டிஷ் தூதுவர் சிவில் சமூகங்களை சந்திக்கப் பயப்படுகிறார். பயங்கரவாத பிரச்சினை தொடர்பாக பிரிட்டிஷ் அரசாங்கமும் இலங்கையிலுள்ள அதன் தூதுவரும் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் எம்மை கவலை கொள்ளச் செய்துள்ளன. பிரிட்டனுடனான இலங்கையின் உறவுகளை பெரிதும் பாதிக்கும் வகையில் அலுவல்கள் நடைபெற்று வருகின்றன - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ப)

# புதிய, புனரமைப்புக் கட்டடங்களுக்கு அமைவுச் சான்றிதழ் பெற அறிவுறுத்து

யாழ்ப்பாணம், மே 26

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சபையின் அனுமதிபெற்று வீடுகளை அமைத்தவர்கள் வேலைகள் பூர்த்தியடைந்ததும் அமைவுச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

புதிதாக அமைக்கப்பட்ட, புனரமைக்கப்பட்ட கட்டடங்களை விலைமதிப்பீட்டுத் திணைக்களம் வரிமதிப்பீடு செய்வதற்கு அமைவுச் சான்றிதழ் அவசியம். எனவே கட்டட வேலைகள் பூர்த்தியடைந்தவர்கள் அமைவுச் சான்றிதழை உடன் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

அமைவுச் சான்றிதழ் பெறாத கட்டடங்களைப் பயன்படுத்துவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது. (202-207)

# யாழ். நகரக் கடைகளில் மருந்தூட்டப்பட்ட பழங்கள்

## திடீர் பரிசோதனையில் கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம், மே 26

யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட பன்னிரண்டு கடைகளில் மருந்தூட்டப்பட்ட பழங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பழவியாபாரம் செய்யும் கடைகளில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் நேற்றுத் திடீர் பரிசோதனை நடத்தினர்.

சுகாதாரத்துக்கு பங்கம் விளைவிக்கும் வகையில் மருந்தூட்டப்பட்ட நிலையில் பழங்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

எதிர்வரும் காலங்களில் இத்தகைய பழங்களை விற்பனை செய்யக்கூடாது என எச்சரிக்கப்பட்டதுடன் அந்தக் கடைகளில் இருந்த பழங்கள் அழிக்கப்பட்டதாக யாழ்.சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார். (அ-1)

# கால்நடை மருந்துகள் இலவசமாக விநியோகம்

ஐக்கிய நாடுகளின் உணவு விவசாய நிறுவனத்தின் அனுசரணையுடன் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் யாழ். அலுவலகம் இலவசமாகக் கால்நடை மருந்துகளை விநியோகித்து வருகின்றது.

மருந்துகள் தேவைப்படும் பண்ணையாளர்கள் தங்கள் பிரதேச கால்நடை வைத்தியர் அலுவலகங்களுடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம் என திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் டாக்டர் திருமதி வ. அமிர்தலிங்கம் தெரிவித்தார். (202)

# அதிவேக தபால் சேவை இன்று பரீட்சார்த்தமாக ஆரம்பம்

குடாநாட்டில் அதிவேக தபால் சேவை இன்று தொடக்கம் பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கப்படுவதாக வட பிராந்திய பிரதித் தபால் மா அதிபர் வி. குமரகுரு தெரிவித்தார்.

யாழ். பிரதம தபாலகத்தில இன்று ஆரம்பமாகும் இச்சேவை, படிப்படியாக ஏனைய தபாலகங்களுக்கும் விஸ்தரிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

குடாநாட்டுக்குள் 50 கிராம் நிறையுடைய அதிவேக தபாலுக்கு 50 ரூபா பிரகாரமும் மேலதிகமாக ஒவ்வொரு 50 கிராம் நிறைக்கு 40 ரூபா பிரகாரமும் கட்டணம் அறவிடப்படும்.

குடாநாட்டுக்கு வெளியே அனுப்பப்படும் 50 கிராம் நிறையுடைய தபாலை 60 ரூபாவுக்கும் அனுப்பலாம். மேலதிகமான ஒவ்வொரு 50 கிராமுக்கு 40 ரூபா அறவிடப்படும்.

தபால்கள் சேர்ந்தமைக்கான உறுதிச்சீட்டைப் பெறுவதற்கு 30 ரூபா செலுத்த வேண்டும். (அ-1)

## நாளை

| | |
|---|---|
| வைகாசி - 13 | ஞாயிற்றுக்கிழமை 27.05.2007 |
| திதி: ஏகாதசி | பின்னிரவு : 12.01 |
| நட்சத்திரம்: | அத்தம் முன்னிரவு : 10.30 |
| [illegible] | : [illegible] |
| ராகுகாலம் | : 04.22 - 05.52 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரத்பவார் ஜனாதிபதி சந்திப்பு

கொழும்பு, மே 26

இலங்கைக்கு வருகைதந்திருந்த இந்திய விவசாயத்துறை அமைச்சர் சரத்பவார் நேற்று முன்தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அலரிமாளிகையில் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பின்போது இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் விவசாயத்துறை தொடர்பான அறிவு மற்றும் தொழில்நுட்பங்களைப் பரிமாறிக்கொள்வது, இந்தியப் பல்கலைக்கழகங்களில் இலங்கை மாணவர்களுக்கு விவசாயத்துறைக் கற்கை நெறிகளை வழங்குவது, விவசாயத்துறை சார்ந்த குழுக்களுக்கு இந்தியாவில் விவசாயத்துறை தொழில்நுட்ப அறிவைப் பெற்றுக்கொடுப்பது போன்ற விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டது.

இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் பெரும் அறுவடையைப் பெற்றுத்தரும் மரக்கறிகள் மற்றும் பழவகைகளின் வித்துகளை இந்நாட்டுக்குத் தருவிப்பது தொடர்பாக மேலும் பேசப்பட்டது.

பால்உற்பத்தியில்தன்னிறைவு கண்டுள்ள இந்தியாவின் அத்தொழில்நுட்பத்தையும் அறிவையும் பெற்றுக்கொள்வதன் மூலம் இந்நாட்டின் பால் உற்பத்தியை அதிகரிப்பது தொடர்பாகவும் கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

இச்சந்திப்பில் இலங்கையிலுள்ள இந்தியத்தூதுவர் ஆலோக்பிரசாத், பிரதித்தூதுவர் ஏ. மாணிக்கம் ஆகியோருடன் அமைச்சர்களான மைத்திரிபால சிறிசேன, ரோஹித போகொல்லாகம, ஹேமகுமார நாணயக்கார, மிலிந்த மொரகொட, காமினி லொக்குகே ஆகியோர் உட்பட அதிகாரிகள் குழுவொன்றும் கலந்துகொண்டது. (சி)

## தீவகத்துக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடைப்பட்டன.

நேற்று அதிகாலையில் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டதை அடுத்து போக்குவரத்துச் சேவைகள் வழமைக்குத் திரும்பின.

எனினும், தாக்குதல் இடம்பெற்ற நெடுந்தீவுப் பிரதேசத்திற்கான படகுச் சேவைகள் நேற்று நடத்தப்படவில்லை. தொலைத்தொடர்பு சேவைகளும் ஏற்கனவே பாதிக்கப்பட்டிருந்தன.

இதனால் நெடுந்தீவிற்கும் ஏனைய பிரதேசங்களுக்குமான தொடர்புகள் துண்டிக்கப்பட்டன. இதேவேளை -

நயினாதீவுக்கான படகுச்சேவை நேற்று மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. எனினும், குறிகாட்டுவான் துறைமுகப் பகுதியில் தரித்து நிற்பதற்குப் பயணிகளைக் கடற்படையினர் அனுமதிக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

நயினாதீவு, அனலைதீவு போன்ற தீவுகளுக்கு செல்வதற்காக சென்றபயணிகள் புங்குடுதீவில் நேற்றுப்பிற்பகல்வரை தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். எனினும், மாலையில் அவர்கள் குறிக்காட்டுவான் ஊடாகப் போக்குவரத்துச் செய்ய அனுமதிக்கப்பட்டனர். (அ-202-111)

## சோதனை நிலையங்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவத்துக்காக தங்கன் வருத்தம் தெரிவித்தார். தொடர்ந்து சோதனைச் சாவடிகளில் கண்காணிப்புப் பணியில் ஈடுபடும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகளுக்கு புலிகள் பாதுகாப்பு உத்தரவாதம் அளிப்பர் என்றும் தங்கன் தெரிவித்தார்.

சந்திப்பையடுத்து நேற்று கொழும்பு திரும்பிய செஞ்சிலுவைக் குழுப் பிரதிநிதி ''இருதரப்பினருக்கும் இடையில் இணக்கப்பாடு ஏற்பட்டு பாதுகாப்பு உத்தரவாதம் தரப்பட்டாலேயே சோதனைச் சாவடிகளில் கண்காணிப்புப் பணியில் ஈடுபடுவது குறித்து முடிவு செய்யப்படும்'' - என்று தெரிவித்தார்.

## மருத்துவ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும். மாவட்ட கோட்டா அடிப்படையில் 39 மாணவர்கள் அதேதுறைக்கு அனுமதிக்கப்பட்டிருக்கவேண்டும். ஆனால் யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து 28 மாணவர்களே அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர். தகுதியுள்ள பதினொரு மாணவர்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை.

ஆகையால் மாவட்டக் கோட்டா முறையில் அனுமதிக்கப்பட்டிக்க வேண்டிய 39 பேரையும் மருத்துவத்துறைக்கு அனுமதிக்க வேண்டும் என்று பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கு உத்தரவிடுமாறு ஒன்பது மாணவர்களும் தமது மனுவில் கோரியுள்ளனர்.

ஒன்பது மாணவர்களின் சார்பிலும் சிரேஷ்ட சட்டத்தரணி மோகன் பாலேந்திரா இந்த மனுவைக் கடந்த புதன்கிழமை தாக்கல் செய்தார்.

எஸ். அபயலாயன், ரி. மகிபா, ஜே.ஏபிரகாம், வி. கஜந்தன், பி. நிர்சாந்தினி, கே. அபிராமி, கே. கார்த்திகா, கே. இராசகாந்தன், எஸ். ஜனார்த்தனா ஆகிய ஒன்பது மாணவர்களுமே பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் செயலுக்கு எதிராக மேல் முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்குதல் செய்துள்ளனர். (அ)

# இ.தொ.கா., முஸ்லிம் காங்கிரஸ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பான்மை மக்களோடு கலந்து வாழும் சிறுபான்மையினரான மலையகத் தமிழர்கள், முஸ்லிம்கள் போன்றோரின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தை முற்றாக ம்ழுங்கடித்து விடும் எனக் கருதும் இ. தொ. கா., ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போன்றவை, தமது மக்களின் நலன் கருதி முழு மூச்சாக இத்திட்டத்தை எதிர்க்கத் துணிந்திருக்கின்றன.

அரசில் இருந்தும், அமைச்சரவையிலிருந்தும் வெளியேற்றப்படும் நெருக்கடி ஏற்பட்டாலும் இந்தத் தேர்தல் சீர்திருத்தத் திட்டத்தை நிறைவேற்றும் அரசின் முயற்சியை முறியடிப்பது என இ. தொ. கா. கங்கணம்கட்டியிருப்பதாகவும்கூறப்படுகின்றது.

சிறுபான்மையினரைப் பிரதிநிதித்துவம்செய்யும்கட்சிகள்சிறியகட்சிகள்நேற்று முன்தினம் ஐ.தே.க.வுடன் சேர்ந்து பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்தின.

**ஜனாதிபதி தொண்டமானுடன் பேசினார்**

இந்தப் பத்திரிகையாளர் மாநாடு நேற்று முன்தினம்வியாழக்கிழமைநடைபெற இருப்பது பற்றிய தகவல் அறிந்ததும் அதற்கு முதல் நாள் இரவு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இ. தொ. கா. தலைவர் ஆறுமுகன் தொண்டமானுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டார் என அறிய வந்தது.

அரசில் அமைச்சராக இருந்து கொண்டு, பிரதான எதிர்க்கட்சியுடன் சேர்ந்து அரசுக்கு எதிரான பொதுப் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்துவது முறையற்றது என்பதை ஜனாதிபதி நாசூக்காகத் தொண்டமானுக்கு எடுத்துரைத்தார் எனவும் தெரிகின்றது.

ஆனாலும், தனது இன மக்களின் அடிப்படை வாக்குரிமை மற்றும் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தோடு விளையாடும் இந்த முயற்சியில் தாம் விட்டுக் கொடுக்க முடியாது என்ற சாரப்பட ஆறுமுகன் பதிலளித்து உரையாடலைத் தொடராமல் விலகிக்கொண்டார் எனவும் கூறப்படுகின்றது.

**பெர்னாண்டேபுள்ளேயும் பேசினார்**

இதன்பின்னர், செய்தியாளர்மாநாடு நடைபெறவிருந்த அன்று காலையில் இ. தொ. கா. தரப்போடு நாடாளுமன்றத்தில் அரசுத் தரப்பு பிரதம கொரடாவான அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே இந்த விடயம் குறித்துப் பேசியிருக்கின்றார்.

இ. தொ. கா., முஸ்லிம்காங்கிரஸ் போன்ற அரசில் இடம்பெற்றுள்ள கட்சிகள் இவ்விடயத்தில் அரசுக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தால் அவை தனித்து ஒரு செய்தியாளர் மாநாட்டை நடத்தலாம். ஆனால் பிரதான எதிர்க்கட்சியுடன் சேர்ந்து அரசுக்கு எதிராகப் பகிரங்கச் செய்தியாளர் மாநாடு நடத்துவது அரசின் கூட்டுப் பொறுப்பிலிருந்து விலகும்நடவடிக்கை என்று அமைச்சர் பெர்னாண்டோபுள்ளே தெளிவுபடுத்தினார் எனத் தெரிகின்றது.

இதனையும் உதாசீனப் படுத்திய இ. தொ. கா., மாற்றுக் கட்சிகளுடன் சேர்ந்து ஐ. தே. க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் ஒரே மேசையில் அமர்ந்திருந்து செய்தியாளர் மாநாட்டை நடத்தியதுடன், அரசின் தேர்தல் மறுசீரமைப்புத் திட்டத்துக்கு எதிராகக் கடும் நிலைப் பாட்டையும் வெளிப் படுத்தியது. அக்கட்சியின்சார்பில்அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானே அதில் பங்குபற்றினார்.

இதே நிலைப்பாட்டை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் அமைச்சர் ரவூப் ஹக்கீமும், மலையக மக்கள் முன்னணியின் சார்பில் பிரதி அமைச்சர் பெ. இராதாகிருஷ்ணனும் அங்கு வெளிப்படுத்தினர்.

ஆனால் அரசுக்கு எதிராக ஐ. தே. கட்சித் தலைவர் ரணிலுடன் சேர்ந்து பத்திரிகையாளர் மாநாட்டில் பங்கு பற்றிய இ. தொ. கா., ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் மலையக மக்கள் முன்னணி ஆகியவை மீது அரசுத் தலைவர் கடுஞ்சீற்றத்துடன் இருக்கிறார் என்பதை உறுதிப்படுத்த முடிந்தது.

இதன் விளைவாக முதற்கட்டமாக, இந்தக் கட்சிகளின் சார்பில் அமைச்சர்களாக இருப்போருக்கு சிலசமயம் அடுத்த அமைச்சரவைக் கூட்டத்துக்கான அழைப்பு அனுப்பப்படாமல் போகலாம் எனத் தெரிகின்றது.

இக்கட்சிகளின் பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்ட பிரதி அமைச்சுப் பதவிகள், அமைச்சரவை அந்தஸ்து அற்ற அமைச்சர் பதவிகள் என்பன வெட்டப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை எனவும் கூறப்படுகின்றது.

''இவர்கள் எல்லோரும் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் எனக்கு எதிராக - ரணிலுக்காக - மும்முரமாக வேலை செய்தவர்கள். அவற்றையெல்லாம் மறந்து, எனது தரப்பில் பலரின் எதிர்ப்பைப் புறக்கணித்து இவர்களுக்கு அமைச்சுப் பதவி கொடுத்து, அரசில் இணைத்து, என்னுடன் வைத்திருக்கிறேன். இவர்களுக்காக அளவுக்கு அதிகமாக அமைச்சர்கள், பிரதி அமைச்சர்களின் எண்ணிக்கையைக் கூட்டியுள்ளேன்.

இதற்காகக் கடும் எதிர்ப்பை நான் எதிர்கொள்ள வேண்டியவனாக இருக்கிறேன். நான் இவ்வளவு தாராள மாக நடக்க, அவர்கள் எனக்குத் தடிப்புக் காட்டுகின்றார்கள். சரியான பாடம் புகட்டுவேன்.''- இப்படி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமக்கு நெருக்கமானவர்களிடம் சீறினார் என அறிய வந்தது. (அ-சி)

## இனப்பிரச்சினை.

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் நாம் இலங்கை அதிகாரிகளுடனும், நோர்வேத்தரப்பினருடனும்மற்றும் இணைத்தலைமை நாடுகளுடனும் இணைந்து தீவிரமாகச் செயலாற்ற இருக்கிறோம்.

இந்த விடயம் தொடர்பாக எமது செய்தியை நாம் அவர்களுடன் பகிர்ந்து கொண்டிருக்கிறோம்.

ஆயினும், இது ஒருகடினமானநிலைமை. இலங்கை மக்களுக்காக ஒன்றிணைந்து அதிகாரப் பகிர்வை ஏற்படுத்தி, அதன்மூலம் தான் சிறுபான்மை மக்களின் ஆதரவைப் பெறமுடியும். இந்தப் பிரச்சினையை ஒரு முடிவுக்குக் கொண்டுவர வேண்டிய கடமைப்பாடு அங்கிருக்கின்ற அனைத்துத் தரப்பினருக்கும் இருக்கின்றது - என்றார். (அ-சி)

# மரண அறிவித்தல்கள்

## செல்வி வாமதேவி கணபதிப்பிள்ளை

**(ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியை)**

கரம்பன்மேற்கை பிறப்பிடமாகக் கொண்ட செல்வி வாமதேவி கணபதிப்பிள்ளை 25.05.2007 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை(மலாயன் பென்ஷனர்)-அன்னம்மா தம்பதியரின் மகளும் தர்மதேவி, குணதேவி, சத்தியதேவி (கொழும்பு),Dr.K.பத்மநாதன், ஜெயதேவி, சாரதாதேவி ஆகியோரின் சகோதரியும்ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் கொக்குவில்மேற்கு, குமாரவாசம் இல்லத்தில்இன்று (26.05.2007) சனிக்கிழமை 12மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்தஅறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கேணியடி ஒழுங்கை, கொக்குவில் மேற்கு. (60973) ச.பிருகதீஸ்வரன் (பேறாமகன்).

## திருமதி ஜெகதீஸ்வரி சிவலிங்கம்



ஏழாலை தெற்கு,சூராவத்தையைப் பிறப்பிடமாகவும் ஏழாலை தெற்கு,விழிசிட்டியை வசிப்பிடமாகவும்கொண்ட திருமதி ஜெகதீஸ்வரி சிவலிங்கம் 24.05.2007 வியாழக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை -பரமேஸ்வரி தம்பதியரின்மகளும் தம்பையா-பூரணம்தம் பதியரின் மருமகளும் சிவலிங்கத்தின் அன்பு மனைவியும் சிவபாலன், சிவரூபன் (கணக்கியலாளர்-கொழும்பு),வசந்தி (ஆசிரியை, சைவமங்கைர்க் கழகம்-வெள்ளவத்தை),சிவகாந்தன் (லண்டன்), வசீகரன் (லண்டன்),சிறீதரன் (பொறியியலாளர்- கொழும்பு) ஆகியோரின்அன்புத்தாயும், விமலாஞ்சலி, ஆநந்தகுமார், பத்மகுமாரி, வசந்தி ஆகியோரின் அன்பு மாமியும், நிரோஷன், நிலோஜா, டக்சிகா, பிரணவன், அனசூயா,நிலானுஜா, அபிநயா, அன்சிகா, அஜய், அக்சான் ஆகியோரின் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான லோகேஸ்வரி,ஜனகேஸ்வரி மற்றும் கணநாதலிங்கம்,ஈஸ்வரலிங்கம்,கௌரீஸ்வரி, சிற்சபேசலிங்கம் ஆகியோரின் அன்புச்சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(26.05.2007) சனிக்கிழமை காலை 10மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காடாகடம்பை இந்துமயானத்திற்கு தகனத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்தஅறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
த.சிவலிங்கம்
(கணவர்)

(60934)


**இறைச்சிக் கோழி விற்பனைக்குண்டு**

சுத்திகரிக்கப்பட்ட புரொயிலர் கோழி இறைச்சி மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்

வரணி மிசன் விற்பனை நிலையம்
145,நவீனசந்தை,
யாழ்ப்பாணம்.

**விக்னா** யாழ்.நகர்
பொருளியல்
N.B.கஜீதரன்
2வது பரீட்சைக்கான கருத்தரங்கு
இன்று (பி.ப 1 மணி)
(26.05.07)

**SKY COMPUTERS (PVT) LTD.**
No, 89, Kandy Road, Chundikuli, Jaffna.
Tel: 021 - 4590325 Fax: 021 - 2229109
Affiliated with Irish International University (U.K)

**Diploma Courses**

| | |
|---|---|
| Ms Office | 2month |
| DTP | 2month |
| Computerized Accounting | 2month |
| Technology | 2month |

Internet Email 2 weeks only 100/=

Near the Kachcheri

**தூய ஆவியார் பெருவிழா**

**திருவிழிப்பு ஆராதனை**

**காலம்: இன்று (26.05.2007) சனிக்கிழமை இரவு 7 மணி முதல் அதிகாலை வரை**

**இடம்: புனித மடுத்தீனார் குருமட மைதானம்**

அதிகாலை 3 மணிக்கு ஆயர் தலைமையில் கூட்டுத் திருப்பலியும் அத்திருப்பலியில் புதுவாழ்வுக்கான அர்ப்பணச் சடங்கும் நடைபெறும்.

**அனைவரும் இரவு 7 மணிக்கு முன்னதாக மடுத்தீனார் மைதானத்திற்கு சமுகம் தரவும்.**

ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.

**பதவி வெற்றிடம்**

காப்புறுதித் துறையில் I.S.O தரச் சான்றிதழ் பெற்ற ஒரே ஒரு நிறுவனமான ஜனசக்தி காப்புறுதிக் கம்பனி பின்வரும் பதவிகளுக்கான நேர்முகத்தேர்வு

★ **வியாபார அபிவிருத்தி மேற்பார்வையாளர்**
★ **காப்புறுதி ஆலோசகர்**

கல்வித்தகைமை:- க.பொ.த (சா/த) சித்தி (கணிதம் உட்பட)
வயது:- 18-60 இருபாலாரும்
சலுகைகள்:- தகுதிக்கேற்ற மாதாந்த சம்பளம்
தரகுப் பணம்
இலவச ஆயுள் காப்புறுதி
வாகன கடன் வசதி
நேர்முகத்தேர்வு:- 28.05.2007 முற்பகல் 10 மணி

நேர்முகத்தேர்வு நடைபெறும் இடங்கள்

ஜனசக்தி இன்சூரன்ஸ் கம்பனி,
165, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 3827.

ஜனசக்தி இன்சூரன்ஸ் கம்பனி,
விக்னேஸ்வரா கல்லூரி வீதி,
நெல்லியடி.
021 226 4418

(நேர்முகத் தேர்வுக்கு பெற்றோருடன் வருவது விரும்பத்தக்கது).

(60917)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) [illegible] 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.05.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org